பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 02 | வியாழக்கிழமை | 18.07.2024 | கதிர் 253

# ரணில் பெரமுனவுடன் இணைந்தால் ஆதரவளிக்க ராஜபக்சக்கள் தயார்

## மகிந்த அறிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்முடன் இணைவதற்கு தயாராக இருப்பாராகஇருந்தால்ஆதரவளிப் பதற்குநாம்தயார்என்றுபொதுஜன பெரமுனவின்தலைவரும்,முன்னாள் ஜனாதிபதியுமானமஹிந்தராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அப்படிஆதரவளிப்பதற்குத்தமது கட்சி விதிக்கும் நிபந்தனைகளை ஊடகங்களிடத்தில் தெரிவிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

பத்தரமுல்லவில் உள்ள பொது ஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தலுக்கான அதிகாரம் ஆணைக்குழுவிடம் சென்றாலும் எமக்கு இன்னமும் காலம் இருக்கின்றது. அந்தக் ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

தேர்தல் நெருங்க நெருங்க ஜனாதிபதிக்கு எல்லோரும் இப்போது தேவைப்படுகிறார்கள். எல்லோருக்கும் நல்லவராக, வேண்டப்பட்டவராகத் தன்னை காட்டி, முன்னிறுத்துவதில் அவர் அக்கறையோடு இருக்கின்றார்.

அரசியல் தீர்வு என்ற பெயரில் எப்படி வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கூட்டம்கூட்டிஅலைகழித்துவந்தாரோ அதுபோன்று இப்போது மலையக நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் பேசத் தொடங்கியிருக்கிறார்.

மலையகத்தில் இ.தொ.கா. ஏற்கனவே ஆளும் தரப்பில் பங்காளியாக இருக்கின்றது. அதேநேரம் தமிழ் முற்போக்குக் கூட்டணியும் அங்கு இருக்கின்றது. இப்போதைக்கு அந்தக் கூட்டணி சஜித் அணியில்தான் இருக்கின்றது. தமிழர்கள், முஸ்லிம்களின் ஆதரவு கிடைக்காது வெற்றியை நெருங்குவதைக்கூடகற்பனைசெய்ய முடியாத ரணில் விக்கிரமசிங்க, மலையகத் தமிழ் மக்களுக்கு வீட்டுரிமை கொடுப்பது தொடர்பில் முன்னைய தனது வாக்குரிமை, செயற்பாட்டிலிருந்து கீழ் இறங்கி ஓர் அமைச்சரவைப் பத்திரத்தை முன்வைத்துள்ளார். மலையகத் தமிழர்களுக்குத் தனிக் காணிகள் என்பதற்குப் பதிலாக தோட்டலயன்களையே தனிக் ☞ 2

## வடக்கு சுகாதாரத்துறை பற்றி அமைச்சர் நேற்று ஆராய்வு

வடக்கு மாகாண சுகாதாரத்துறை தொடர்பான விசேட கலந்துரையாடல் கௌரவ சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன தலைமையில் நேற்று நடைபெற்றது. வடக்கு மாகாண பிரதம செயலாளர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இந்த கலந்துரையாடல் நடைபெற்றது. வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், பாராளுமன்ற உறுப்பினர்கள், மத்திய சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் ஊ.பு. மஹிபால, வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன் ஆகியோர் இந்த கலந்துரையாடலில் கலந்துக்கொண்டனர்.

அத்துடன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், ☞ 2

## நீர்க் கட்டணக் குறைப்பு குறித்து அடுத்த வாரம் அரசு தீர்மானம்

### அமைச்சர் ஜீவன் தெரிவிப்பு

நீர் கட்டணக் குறைப்புத் தொடர்பில் அடுத்த வாரம் தீர்மானிக்கப்படும், மின் கட்டணம் குறைந்துள்ளதால் நீர்க் கட்டணமும் குறைக்கப்படும் என்று நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மின் கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்தமைக்காக அமைச்சர் கஞ்சன விஜேசேகரவை பாராட்டுகின்றோம். நீர் விநியோகம் ☞ 8

## ஜனாதிபதித் தேர்தலை நிறுத்த ஒருபோதும் இடமளிக்கக்கூடாது

### சிறீதரன் எம்.பி. வலியுறுத்து

ஜனாதிபதித் தேர்தலை விரைந்து நடத்தவேண்டும், பிற்போடவோ நிறுத்தவோ இடமளிக்கக்கூடாது என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்

கிளிநொச்சியில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தததாவது:

இன்றையநாளில்இருந்து தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் கிடைத்துள்ளது. ஏற்கனவே உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டு வேட்பு மனுக்களும் கோரப்பட்ட நிலையில் அது ஒத்திவைக்கப்பட்டது.

ஆகவேதற்போது தமக்கு கிடைத்துள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி தேர்தல்கள் ஆணைக்குழுவானது காலம்தாழ்த்தாது, தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். குறிப்பாக நாட்டின்ஜனநாயகஒருமைப்பாட்டையும், மக்களின் வாக்களிக்கும் ☞ 2

## விரைவாக ஜனாதிபதி தேர்தலை நடத்தும்படி ஐ.தே.க. கோரிக்கை

### ஆணைக்குழுவைச் சந்தித்து விடுத்தது

ஜனாதிபதித் தேர்தலை எவ்வளவு விரைவாக நடத்த முடியுமோ அவ்வளவு விரைவாக நடத்தும்படி தாம் தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் வலியுறுத்தியுள்ளனர் என்று என்று ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக் குழுவின் அங்கத்தவர்களை நேற்று இராஜகிரியவில் உள்ள தேர்தல் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியபின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதிதேர்தலை எந்தளவு விரைவாக நடத்த முடியுமோ அந்தளவு விரைவாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் ☞ 8

## மேல் மாகாணத்தில் மற்றொரு துறைமுகம் அமைக்கத் திட்டம்

### ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

மேல் மாகாணத்தில் மற்றொருதுறைமுகத்தை அமைக்க உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கதெரிவித்தார்.

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றகொழும்பில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் குறைந்த ☞ 2

## 1,300 மருத்துவர், 500 தாதியர்கள் இலங்கையைவிட்டு வெளியேற்றம்

1,300 வைத்தியர்களும் 500க்கும் மேற்பட்ட தாதியர்களும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாகநாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர் என்றுசுகாதாரஅமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் ☞ 8

## வேட்பாளர்கள், முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பை மேற்பார்வை செய்ய தனி குழு

### பரிந்துரைக்கிறார் ரணில் விக்கிரமசிங்க

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும்வேட்பாளர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் பிரத்தியேகப் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வையிட குழுவொன்றை நியமிப்பதற்கும், அந்த சகல பாதுகாப்பு பணிகளையும் ஒருங்கிணைக்க பிரதி பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிக்கவும் பரிந்துரைத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பரப்புரை பேரணியில் அந்த நாட்டு முன்னாள் ஜனாதிபதி ☞ 2

## நடுத்தர மக்களில் 79 வீதத்தினர் தற்போது மகிழ்ச்சியாக இல்லை

### ஆய்வில் தகவல் என்கிறார் ஹர்ஷ டி சில்வா எம்.பி.

நடுத்தர மக்களில் 79 சதவீதமானோர் கடந்த காலத்தைவிட தற்போது சந்தோஷமாக வாழவில்லை என்றும் அந்த ஆய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றுக்கு தீர்வு காண்பதற்கு அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்என்றுஐக்கிய மக்கள் சக்தியின் ☞ 2

## அரசியல் தீர்வைத் தர பல தலைவர்கள் உண்டு பொருளாதார தீர்வை ரணிலால்தான் தரமுடியும்

### ஐ.தே.க. உப தலைவர் அகிலவிராஜ் கருத்து

எமது நாட்டில் அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்க அதிகமான தலைவர்கள் இருக்கிறார்கள். ஆனால், வீழ்ச்சியடைந்திருக்கும் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ரணில் விக்ரமசிங்கவுக்கு மாத்திரமே முடியும் என்று ஐக்கிய தேசிய கட்சி உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி வலய ☞ 8

## "வெறுக்கத்தக்க செயல்"

### அரசமைப்பின் 22ஆவது திருத்தம் பற்றி பீரிஸ் கருத்து

ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில்தேர்தலுக்குநெருக்கடிகளை ஏற்படுத்தும் வகையில்ஆளும்தரப்புச் செயற்படுவது முற்றிலும் வெறுக்கத்தக்கது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்தெரிவித்தார்.

சுதந்திர மக்கள்சபை காரியாலயத்தில் ☞ 8

## இனி இது .....

குடியிருப்புக்களாகமாற்றுவதற்கான முன்மொழிவு அது.

ரணிலுக்கு இப்போது தமிழ் -முற்போக்குக் கூட்டணியின் ஆதரவும் தேவை என்பதால் மலையகத்தில் இ.தொ.காவை முக்கியத்துவப்படுத்தி முற்போக்குக் கூட்டணியைப் பகைத்துக்கொள்ளக்கூடாதுஎன்பதில் கவனமாகஇருக்கின்றார். இதற்கான சம்பவம் ஒன்றும் அண்மையில் நடந்துள்ளது. பாடசாலை மாணவர்களுக்கான ஜனாதிபதி புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் நுவரெலியாவில் நடந்தது. அதற்கு அமைச்சர் ஜீவன் அழைக்கப்பட்டிருந்தார். ஆனால், அங்கு அவர் பிரதம விருந்தினர் உரையாற்றுவதற்கு இடமளிக்கப்படவில்லை.

இதனால் கோபமடைந்த ஜீவன் தொண்டமானும் மருதபாண்டி ராமேஸ்வரனும் நிகழ்வு முடிவதற்கு முன்னரே அங்கிருந்து எழுந்து வெளியேறிவிட்டார்கள். இ.தொ.காவை மலையகத்தில் முதன்மைப்படுத்தும் விதத்தில் இப்போதைக்குச் செயற்பட்டு முற்போக்குக் கூட்டணியினரைத் தூர விலக்கிவிடாமல் இ-ருக்கும் ரணிலின் தந்திரத் திட்டத்தின் ஒரு பகுதிதான் இது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

வடக்குக்கு ஒரு 13ஆவது திருத்தம் மலையகத்திற்கு ஒரு காணி உரித்துத் திட்டம் என்று ரணிலின் கைவசம் 'கரட்'டுகள் நிறைய இருக்கின்றன. கடைசியில் அவரது வலைக்குள் யாரெல்லாம் விழுகின்றார்கள் என்று பார்க்கலாம்.

.........................................

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களை நேற்று சந்தித்து ஜனாதிபதித் தேர்தலை முடிந்த விரைவில் நடத்தும்படி வலியுறுத்தியிருக்கின்றது ஐக்கிய தேசியக் கட்சி. இதை வலியுறுத்த வந்த கட்சியின் பிரமுகர்கள் யாரென்றால் கட்சித் தவிசாளர், வஜிர அபேவர்த்தன மற்றும் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார.

இந்த பாலித ரங்கே பண்டாரதான் ஜனாதிபதியினதும் நாடாளுமன்றத்தினதும் பதவிக் காலத்தை மக்கள் கருத்துக் கணிப்பு மூலம் நீடிக்கவேண்டும் என்று தெரிவித்து சர்ச்சைக்குள் மாட்டிக்கொண்டவர். அதாவது தேர்தலே இல்லாமல் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீடிக்கவேண்டும் என்றவர் நேற்று ஆணைக்குழுவிற்கு வந்து முடிந்த விரைவில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும்படிகேட்டிருக்கிறார். எல்லாம் விந்தைதான்.

தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகத்தில் இருந்து வெளியே வந்த ஐ.தே.க. தலைவரும் செயலாளரும் அங்கு கூடியிருந்த செய்தியாளர்கள் சிலருக்குத் தமது சந்திப்புக் குறித்துத் தெரிவித்துக்கொண்டிருந்த சமயத்தில் அங்கு வந்த ஒருவர், இவர்கள் கூறியதைக் கேட்டுவிட்டுப் பொறுக்க முடியாமல் பாலித ரங்கே பண்டாரவுடன் வாக்குவாதத்தில் ஈடுபடத் தொடங்கிவிட்டார். தேர்தல்கள்திணைக்களம்முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களில் ஒருவரே அப்படிவாக்குவாதத்தில்ஈடுபட்டவர்.

ஐ,தே,க. செயலாளரின் ஜனாதிபதித் தேர்தல் குறித்த முன்னைய அறிக்கைகள் தொடர்பில்தான் அவர் பாலிதவுடன் வாக்குவாதம் புரிந்தார். எனினும் அங்கிருந்தால் பிரச்சினை என்று கருதிய பாலித சிரித்துக்கொண்டே மெல்ல அங்கிருந்து தனது பாதுகாவலர்களுடன் நகர்ந்து ஓடிவிட்டார்.

தன்வினை தன்னைச் சுடும் என்றும் சும்மாவா சொல்லியிருக்கிறார்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தில் நாம் வேட்பாளரை அறிவிப்போம். அந்த வேட்பாளர் நிச்சயமாக மொட்டுக்கட்சியின் ஆதரவினைப்பெற்றவராகஇருப்பார். இப்போது அவசரப்பட வேண்டாம். நாம் வேட்பாளரை அறிவிப்போம்.

கடந்த காலங்களில் நாங்கள் அனைவரினதும் ஆதரவினைப் பெற்ற வேட்பாளரை நிறுத்தினோம். அவர் போதுவேட்பாளர்தான். அதனைத்தான் மொட்டுக் கட்சி செய்தது. அதுமட்டுமன்றி ,பொருத்தமான நேரத்தில் தீர்மானங்களை எடுப்போம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமங்கவுக்கு நாங்கள் ஆதரவு வழங்கி ஜனாதிபதி ஆக்கினோம். அது அந்தநேரத்தில் எடுத்த தீர்மானம் ஆகும். அவர் எம்முடன் இணைந்துகொள்வதற்கு விரும்பினால் நாம் அவரை ஏற்றுக்கொள்வோம். அவருடனான நிபந்தனைகளை ஊடகங்களுக்கு தெரிவிக்க முடியாது என்றார்.

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமையையும் உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகளை தேர்தல்கள் ஆணைக்குழு உடன் மேற்கொள்ள வேண்டும்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாடும் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்பதுதான். மக்கள் ஜனநாயக முறைப்படி தங்களுக்கு விரும்பிய ஒருவரைத் தெரிவு செய்வதற்கு உரித்துடையவர்கள். அந்த உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.

தேர்தலைப் பிற்போடுவதற்கோ, அல்லது இருட்டடிப்புச்செய்து வேறு நடவடிக்கைகள் மூலமாக தேர்தலை நடத்தாதுவிடுவதற்கோ இடமளிக்கக் கூடாது. விரைந்து தேர்தல்கள் ஆணைக்குழு திகதியை அறிவிக்க வேண்டும் - என்றார்.

## மேல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமானம் பெறும் 50,000 குடும்பங்களுக்கு காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் 'ரன்தொர உறுமய' நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அவங்கு மேலும் தெரிவித்ததாவது:

உங்களின் பிரச்சினைகளில் ஒன்று இன்று தீர்ந்துவிட்டது. உங்கள் வீட்டின் உரிமை உங்களுக்கு கிடைத்துள்ளது. ஒரு வீட்டின் உரிமையை இழப்பது மக்களுக்கு ஒரு பெரிய பிரச்சினை என்பதை நாம் அறிவோம்.

நாங்கள் மிகவும் இக்கட்டான காலக்கட்டத்தில் ஆளும்தரப்பைப் பொறுப்பேற்றோம். கடந்த பொருளாதார நெருக்கடியால் இந்த மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். ஆனால் இந்த நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப ஆளும்தரப்பு செயற்படும் என்று நீங்கள் நம்பினீர்கள். அந்த நம்பிக்கையின் காரணமாகவே அந்தப் பணியில் வெற்றி பெறும் வாய்ப்பு கிடைத்தது. எங்கள் மீது நம்பிக்கை வைத்து பொறுமையாக செயற்பட்ட உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

இன்று நாடு பொருளாதார ரீதியாக முன்னேறி வருகிறது. இந்த ஆளும்தரப்பு ஒரு கட்சியால் கட்டியெழுப்பப்பட்டது அல்ல. சிலர் பொறுப்புகளை புறக்கணித்த போது, ஒவ்வொரு கட்சியிலிருந்தும் நபர்களை திடீரெனத் திரட்டி இந்த ஆளும் தரப்பு உருவாக்கப்பட்டது. இதற்கு முன் இந்த நாட்டில் இப்படியொரு ஆளும்தரப்பு இருக்கவில்லை.

இன்று நாம் ஒரு நாடாகக் கட்டியெழுப்புகின்ற இவ்வேளையில் சாதாரண மக்களுக்கும் இதன் பயன்கள் சென்றடைய வேண்டும். அதனால்தான் இந்த அடுக்குமாடி குடியிருப்புகளின் முழு உரிமையையும் உங்களுக்கு வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். நாம் இப்போது ஒரு நாடாக முன்னோக்கி செல்கினறோம். ஆனால் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு நாம் இன்னும் முன்னேற வேண்டும். மக்களுக்கு நல்ல வாழ்க்கைத் தரம் இருக்க வேண்டும்.

அத்துடன் பெருந்தோட்ட மக்களுக்கு வீடுகள் வழங்கும் வேலைத்திட்டம் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும். சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து இது குறித்து கலந்துரையாடினேன். புதிய சட்டம் தயாரித்து அனைவருடனும் கலந்தாலோசித்து பணிகளை மேற்கொள்ளுமாறு நான் பணிப்புரை விடுத்தேன்.

கிராமம், நகரம் மற்றும் பெருந்தோட்டப் பிரதேசங்களில் உள்ள அனைத்து மக்களுக்கும் வீட்டு மற்றும் காணி உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றோம். அது இந்த ஆளும் தரப்பின் முக்கிய வேலைத்திட்டம் என்பதைக் கூறவேண்டும். நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தும் வேலைத் திட்டத்தை அங்கிருந்து ஆரம்பிப்போம்.

இந்த மாகாணத்தில் புதிய துறைமுகம் ஒன்றை அமைக்க முடியும். அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் உள்ளிட்ட குழுவினர் ஏற்கனவே அதற்கான பணிகளை செய்து வருகின்றனர். அத்துடன், கொலன்னாவ பிரதேசத்தில் சில புதிய பாடசாலைகளை அமைக்க தீர்மானித்தோம். அந்தத் வேலைத்திட்டத்தை நாங்கள் தொடர்ந்து முன்னெடுக்க உள்ளோம் - என்றார்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், விசேட வைத்தியர்கள் உள்ளிட்ட பலரும் கூட்டத்தில் கலந்துக் கொண்டனர்.

இந்த விசேட கூட்டத்தில் உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர்,

சுகாதார மற்றும் கல்வித் துறைகளே நாட்டில் மிகவும் சிக்கல் வாய்ந்தவைகளாக காணப்படுகின்றன. இந்த இரண்டு துறைகளிலும் மிகவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்றனர். எனினும் மாகாணத்தை பொறுத்தவரையில் எங்களுக்கு பல சவால்கள் காணப்படுகின்றன. வளப்பற்றாக்குறை காணப்படுவதுடன், எங்கள் மீதான குற்றச்சாட்டுக்களும் காணப்படுகின்றன. சுகாதாரதுறையில் பலவிடயங்களை மேம்படுத்த வேண்டிய தேவைக் காணப்படுகின்றது. நோய் தடுப்புக்களை மேற்கொள்வதுடன் நோயாளர்களின் உரிமைகளை பாதுகாக்குமாறே எனது அதிகாரிகளுக்கு நான் கூறி வருகின்றேன்.

வரையறுக்கப்பட்ட வளங்களை பயன்படுத்தி சிறந்த சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன. மாகாண சுகாதார துறையை மேம்படுத்துவது தொடர்பில் எனது அதிகாரிகளுடன் தொடர்ந்து கலந்துரையாடி வருகின்றேன். அத்துடன் மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களால் நான்கு வைத்தியசாலைகளில் திறந்துவைக்கப்பட்ட விசேட பிரிவுகளிலும் வளங்களை பகிர்ந்து பயன்படுத்துவது தொடர்பில் ஆராயப்படுகிறது. முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் காணப்படும் வைத்தியசாலைகளின் குறைப்பாடுகள் தொடர்பில் அறிந்துள்ளோம்.

குறித்த வைத்தியசாலைகள் தொடர்பான முன்மொழிவுகள் தயார் செய்யப்பட்டு இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளன. மக்களை பாதுகாப்பதற்கான அதிகபட்ச முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நிலையில் மாகாண சுகாதார துறையில் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறைக்கு தீர்வுகளை வழங்குமாறு அமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்தேன். இந்த விடயம் தொடர்பில் விரைவில் தீர்வுகளை பெற்றுத்தருவதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார் என்றார்.

# மலையக எம்.பிக்களுடன் ஜனாதிபதி நேற்றுச் சந்திப்பு

லயன் குடியிருப்புகளை, 'பெருந்தோட்ட புதிய குடியேற்ற கிராமங்களாக' அறிவிக்கும் உத்தேசம் கொண்ட தனது அமைச்சரவை பத்திரம் தொடர்பில் மலையக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் கலந்துரையாடினார். ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று இந்தச் சந்திப்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி தூதுக்குழு சந்தித்து உரையாடியது. இந்தக் கூட்டத்தில் ஆளும்தரப்பின் பங்காளிக்கட்சியான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர். இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் மற்றும் ஜனாதிபதி ஆலோசகர் வடிவேல் சுரேஷ் ஆகியோரும் பற்கேற்றிருந்தனர்.

கூட்டதத்தில் தமுகூ தலைவர் மனோ கணேசன் தெரிவித்ததாவது:

பெரும் தோட்டங்களில் வாழும் சுமார் 200,000 குடும்பங்களை, தோட்ட நிர்வாகங்களின் நவீன அடிமைத்துவ பிடிகளில் இருந்து அகற்ற வேண்டும் என்பது தமிழ் முற்போக்கு கூட்டணியின் அரசியல் விஞ்ஞாபனத்தில் அடங்கியுள்ள முன்னணி கோரிக்கையாகும். அதை செய்யுங்கள். அதற்கு கொள்கை ரீதியாக ஆதரவு தருகிறோம். ஆனால், லயன் காம்பராக்கள்தான் புதிய கிராமங்கள் என்று நீங்கள் இன்று கூறமுயல்வதை நாம் ஏற்க முடியாது. இனியும் எமது மக்கள் மலை உச்சிகளில் மலைசாதி பழங்குடி மக்கள் போன்று வாழ்வதை நாம் ஏற்க முடியாது.

மலை நாட்டு புதிய கிராமங்கள் அமைச்சு என்ற பொருளில், பெரும் தோட்டங்களில், காணி உரிமையுடன் கூடிய தனி வீட்டு புதிய கிராமங்களை அமைத்து காணி உரிமை கோரிக்கையை, உங்கள் ஆட்சியில், 2015ம் ஆண்டு முதல் அரசியல் ரீதியாக ஆரம்பித்து வைத்த கட்சி தமிழ் முற்போக்கு கூட்டணியாகும். கடந்த வருடம், மலையக மக்கள் இந்நாட்டிற்கு வந்த 200 வருட பூர்த்தியை அரசியல் கட்சிகளும், தொழில் சங்கங்களும், சிவில் அமைப்புகளும் நினைவு கூர்ந்த நிகழ்வுகளில் மேல் எழுந்த பிரதான கோசம், காணி உரிமை கோரிக்கை ஆகும்.

ஆகவே லயன் காம்பராக்களை, 'பெருந்தோட்ட புதிய குடியேற்ற கிராமங்கள்' என்று கூறி, இன்று மலையகம் முழுக்க எழுந்துள்ள காணி உரிமை கோரிக்கையை குழிதோண்டி புதைக்க வேண்டாம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி, பிரதி தலைவர் பழனி திகாம்பரம் எம்பி, எம். வேலு குமார் எம்பி, எம். உதயகுமார் எம்பி ஆகியோர் அடங்கிய தூதுக்குழு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் தெரிவித்து, இது தொடர்பான கட்சியின் நிலைபாட்டை தெரிவிக்கும் எழுத்து மூல ஆவணத்தையும் கையளித்து உள்ளது.

2010ஆம் ஆண்டு எதிர் கட்சி தலைவராக நீங்கள் இருந்த வேளையில், பெரும் தோட்டங்களில் வாழும் மலையக மக்களுக்கு, நெடுஞ்சாலை ஓரங்களில் வீடுகளை அமைக்க இடமளிப்பதன் மூலம்தான் அவர்களை தேசிய நீரோட்டத்துக்கு உள்ளே கொண்டு வர முடியும் என என்னிடம் நீங்கள் நேரடியாகக் கூறி இருந்தீர்கள். இது பற்றி 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ஆம் நாள், உங்கள் அமைச்சராக இருந்த போது உரையாற்றி இருந்தேன். அன்று நாம் நாடாளுமன்றத்தில் உங்கள் 40 ஆண்டுகால பொது வாழ்வை சிலாகித்து ஒரு நிகழ்ச்சியை நடத்தினோம். எனது உரையின் ஹன்சாட் பிரதியை உங்களுக்கு இன்று இப்போது தருகிறேன். தமிழ் முற்போக்கு கூட்டணி பின்வரும் ஆறு கோரிக்கைகளை கடமை பூர்வமாக உங்களிடம் முன் வைக்கிறது;

நீங்கள், எமது மக்களுக்கு உறுதி அளித்த வீட்டு வதிவிட காணிகளை, புவியல் ரீதியாக தேசிய நெடுஞ்சாலைகளுக்கு அண்மித்ததாக, அதிக பட்சம் 3 கிலோ மீட்டருக்கு உட்பட்ட ஸ்தலங்களில் வழங்குங்கள்.

காணியின் விஸ்தீரணம், அந்த பிரதேச செயலக பிரிவில், காணி வழங்களின் போது கடைபிடிக்கப்படும் நடை முறைக்கு ஏற்ப இருக்க வேண்டும்.

காணி உரிமை பத்திரத்தின் சட்ட அந்தஸ்து, நாட்டில் ஏனைய பிரதேசங்களில் வழங்கப்படும் காணி உரித்து பத்திரங்களை ஒத்ததாக இருக்க வேண்டும். காணி உரிமை பத்திரங்கள், குடும்ப பெண் தலைவிகளின் பெயர்களில் வழங்க பட வேண்டும் என நாம் விரும்புகிறோம். இது பற்றி மேலும் நிபந்தனைகள் இருக்குமாயின், உங்களுடன் தொடர்ந்து உரையாட தமுகூ தயாராக இருக்கிறது. திருமணமான ஒவ்வொரு தம்பதிகளும், ஒரு குடும்பமாகக் கணிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு குடும்பத்துக்கும் காணி வழங்கப்படவேண்டும். இயன்றோர், தமது காணிகளில் வீடுகளைக் கட்டி கொள்ளட்டும். இயலாதோர், அரச மற்றும் இந்திய, சர்வதேச வீடமைப்பு திட்டங்களில் இடம் பெறட்டும் என்றார்.

இதேவேளை, அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்ததாவது:

ஜனாதிபதியின் அமைச்சரவைப் பத்திரம் தொடர்பில் கலந்துரையாடியிருந்தோம். அதுபற்றி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளியில் வந்து என்ன சொன்னார்களோ தெரியவில்லை. ஆனால் ஜனாதிபதியின் முயற்சிக்கு அவர்கள் ஆதரவு தெரிவித்திருந்தார்கள். சில திருத்தங்களை முன்வைத்தார்கள். அவற்றைச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. தோட்டத் தொழிலாளிகளின் பிள்ளைகள் கொழும்பில் வாழ்கின்றார்கள். அவர்கள் தமது அடிப்படைத்தேவைகளை பூர்த்தி செய்வதற்கு கூட முடியாது. காரணம் அவர்களுக்கு நில உரித்து கிடையாது. ஆகவே காணி உரிமையை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதனையே ஜனாதிபதி மேற்கொள்கின்றார் - என்றார்.

## நடுத்தர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தததாவது:

பொருளாதார நெருக்கடிகள் அதிகரித்துள்ளமையால் 26 சதவீதமான மக்கள் உள ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஆய்வொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. பணவீக்கம் குறைவடைந்துள்ளதாகச் சிலர் கூறுகின்றனர். பணவீக்கம்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதி ரணிலின் வெற்றியை யாராலுமே தடுத்துவிட முடியாது

## ஐக்கிய தேசிய கட்சி உறுதி

ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதற்கு ரணில் விக்ரமசிங்கவோ அரசாங்கமோ எந்தவித மறைமுக நடவடிக்கையையும் மேற்கொண்டதில்லை. ஆனால் எதிர்க்கட்சியேதேர்தலைபிற்போடுவதற்கானசதித்திட்டங்களை மேற்கொண்டு ரணில் விக்ரமசிங்கவின் மீது குற்றம்சாட்டி வருகிறது. ஆனால் உரிய காலத்தில் தேர்தலை நடத்துவதற்கு ரணில்விக்ரமசிங்க உறுதியாக இருக்கிறார் என ஜனாதிபதியின் தொழில் உறவுகள் ஆணையாளர் சமன் ரத்னப்பிரய தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதற்கு ஒரு சிலர் மறைமுகமாகசெயற்பட்டுவருகின்றனர். கடந்தவாரம்வியாபாரி ஒருவரால்ஜனாதிபதியின்பதவிக்காலத்தைகேள்விக்குட்படுத்தி, உயர் நீதிமன்றில் வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உடனடியாக செயற்பட்டு, ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள் என்பதை அமைச்சரவையில் உறுதிப்படுத்தியதுடன், உயர் நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கை செல்லுபடியற்றதாக நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் தேவையான ஆலாசேனைகளை வழங்கி இருந்தார். அதன் பிரகாரம் குறித்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது.

ஆனால் குறித்த வழக்கு தாக்கல் செய்த நபர், தற்போது ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் ஒருவரின் நெருங்கிய நண்பர். இதன் மூலம் தேர்தலை பிற்போடுவதற்கு சதித்திட்டங்களை மேற்கொள்பவர்கள் யார் என்பதைபுரிந்துகொள்ளலாம். அதேபோன்று தற்போது மீண்டும் தேர்தலை பிற்பாஹிடும் நோக்கில் சட்டத்தரணி ஒருவரால் உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தது. அந்த வழக்கும் உயர் நீதிமன்றால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வாறு நாட்டுக்குள் குழப்பகரமான நிலைமைஒன்றைஏற்படுத்தி,அதனைரணில் விக்ரமசிங்கவின் மேல் சுமத்துவதற்கான நடவடிக்கையே இடம்பெற்று வருகிறது.



தேர்தலில் ரணில் விக்ரமசிங்க போட்டியிடுவதை தடுப்பதற்கும் அவர் மீது மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்துவதற்குமே இவ்வாறான நடவடிக்கைகளை சிலர் மேற்கொண்டு வருகின்றனர்.

அதனால் ஜனாதிபதி தேர்தலை உரிய காலத்தில் நடத்துவதற்கு ரணில் விக்ரமசிங்க உறுதியாக இருக்கிறார். அவர் தேர்தலில் சுயாதீன வேட்பாளராக போட்டியிடுவார். அதேபோன்று பெரும்பான்மை வாக்குகளால் ரணில் விக்ரமசிங்க வெற்றி பெறுவதை சஜித், அநுர யாராலும் தடுக்க முடியாது. - என்றார்.(05)

# வெதுப்பக உற்பத்திகளினது விலையை குறைக்க முடியாது

## உரிமையாளர்கள் திட்டவட்டம்

மின்கட்டணம்குறைவடைந்தாலும் பேக்கரி பொருள்களின் விலையை குறைக்க முடியாது என பேக்கரி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பேக்கரி பொருள்களுக்கு தேவை யான மா, சீனி, முட்டை மற்றும் மாஜரின் ஆகியவற்றின் விலை குறைக் கப்படாமையே இதற்கான காரணம் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள்சங்கத்தின்தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மின்சாரக் கட்டணக் குறைப்பு காரணமாக சில உணவுப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், முட்டையின் விலை மீண்டும் அதிகரிக்குமானால் உணவுப் பொருள்களின் விலைகளை அதிகரிக்கநேரிடும்எனஅகிலஇலங்கை உணவக மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள்சங்கத்தின்தலைவர் தெரிவித்துள்ளார்.(05)

# நானுஓயா ரயில் நிலையத்தை நவீனமயப்படுத்தும் வேலைத்திட்டத்தைப் பூர்த்தி செய்யத் தீர்மானம்

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்தின்நிதியைப்பயன்படுத்திநானுஓயாரயில் நிலையத்தைநவீனமயப்படுத்தும்வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2023.04.03 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

கட்டுமானப் பொருளகளின் விலை அதிகரிப்பால் நானுஓயா ரயில் நிலையத்தை நவீனமயப்படுத்தும் வேலைத்திட்டத்திற்கான ஒப்பந்தப் பெறுமதி 74.63 மில்லியன் ரூபா 101.81 மில்லியன் ரூபா வரைக்கும் அதிகரித்துள்ளது.

அதற்கமைய, புதிய திருத்தப்பட்ட மதிப்பீட்டின் கீழ் இலங்கை புகையிரத திணைக்களம் மற்றும் பொறியியல் பணிகள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணியகம் மூலம் குறித்த நவீனமயப்படுத்தல் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கும், அதற்குத் தேவையான மேலதிக தொகையை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்தின் மூலம் பெற்றுக் கொள்வதற்கும் சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.(05)

# முன்னாள் கிரிக்கெட் வீரர் சுட்டுக்கொலை





இலங்கையின் 19 வயதுக் குட்பட்டோருக்கான அணியின் முன்னாள்தலைவர்தம்மிக்கநிரோசன சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அம்பலாங்கொட கந்தெவத்தை பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தம்மிக்க நிரோசனவின் தலைமைத்துவத்தின் கீழ் பர்வேஸ் மகரூவ் அஞ்சலோ மத்தியுஸ் உபுல்தரங்க உட்பட பல முன்னாள் வீரர்கள் விளையாடியிருந்தனர்.(05)

# ஓமன் அருகே எண்ணெய் கப்பல் ஒன்று இலங்கைப் பணியாளருடன் மூழ்கியது

*ஓமன் அருகே எண்ணெய் கப்பல் ஒன்று கடலில் மூழ்கியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.*

*அந்த கப்பலில் 16 பேர் இருந்ததாக கூறப்படுகிறது.*

*அவர்களில் 13 பேர் இந்தியர்கள். மற்ற மூவர் அவர்கள் இலங்கையர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*ஏமன் நாட்டில் உள்ள ஏடன் துறைமுகத்தை நோக்கி கப்பல் சென்று கொண்டிருந்தபோதே குறித்தவிபத்துஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

*(05)*

# தஞ்சாவூர் பட்டமளிப்பு விழாவில் அதிதியாக மு.கா. தலைவர் ஹக்கீம்




(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

தமிழ்நாடு, திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக் கழகத்தோடு ஒன்றிணைக்கப்பட்டுள்ள, தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் ஆர்.டி.பி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 18 ஆம், 19 ஆம் மற்றும் 20 ஆம் பட்டமளிப்பு வைபவம், கடந்த ஞாயிஞ்ற்றுக்கிழமை கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.



பிரஸ்தாப கல்லூரியின் கல்வி குழுமத்தின் போஷகர் எம். ஏ. தாவூத் பாட்ஷா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், கல்லூரியின் முதல்வர் எம். முகமது முகைதீன் வரவேற்புரையாற்றியதோடு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவருமான பேராசிரியர் கே.எம். காதர் முகைதீன், இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின்



தலைவருமான ரவூப் ஹக்கீம் ஆகியோர் கலந்து கொண்டு 717 மாணவ, மாணவிகளுக்குப் பட்டங்களை வழங்கி வைத்து சிறப்புரையாற்றினர்.

பெண்கள் ஒரு காலத்தில் உயர் கல்வி கற்க தயக்கம் காட்டியதையும், தற்போது பெண்கள் பல்வேறு துறைகளிலும் பட்டங்கள் மற்றும் தங்கப் பதக்கங்கள் பெற்று முதல் நிலைக்கு வந்துள்ளதையும் மையப்படுத்தியதாக அவர்களின் உரைகள் அமைந்திருந்தன.

இவ்விழாவில் கல்லூரியின் துணைத் தலைவர் ரபியா பேகம், நிர்வாகத் துணை இயக்குனர் டாக்டர் சையத் ஹுசைன், அறக்கட்டளை உறுப்பினர் டாக்டர் அப்ரோசா சுல்தானா ஆகியோர் பட்டதாரி மாணவிகளைப்பாராட்டிப்பேசினர். துணை முதல்வர் முனைவர் சி. தங்கமலர் உறுதிமொழியை வாசிக்க, பட்டதாரிகள் அந்தப் பட்டமளிப்பு உறுதிமொழியை ஒப்புவித்தனர்.

வெகு விமரிசையாக நடைபெற்ற இவ்விழாவில், கல்வி குழுமத்தின் நிர்வாகிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் ஊழியர்களும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஏன் இந்தப் பாதுகாப்பு?

தென்னை மரத்தில் தேள் கொட்டினால் பனை மரத்தில் நெறி கட்டும் என்பதைப் போலுள்ளது அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டுள்ள ஒரு பரிந்துரை. ஜனாதிபதித் தேர்தலையொட்டி போட்டியிடவுள்ள வேட்பாளர்களுக்கும் முன்னாள் ஜனாதிபதிகளுக்குமான பாதுகாப்பை அதிகரித்து உறுதிப்படுத்தும் வகையில் ஒரு தனிக் குழுவை நியமிப்பதற்கும் அதனை ஒருங்கிணைப்பதற்கு ஒரு பிரதிக் காவல் மா அதிபரை நியமிக்கவும் பரிந்துரை செய்திருக்கிறார் அரசுத் தலைவர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் தனிப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளை இந்தக் குழு மேற்பார்வை செய்யும். அந்த சகல பாதுகாப்பு பணிகளையும் ஒருங்கிணைக்க பிரதிக் காவல் மா அதிபர் ஒருவரை நியமிக்கவுமான இந்தப் பரிந்துரையை ஒரு அமைச்சரவைப் பத்திரம் ஊடாக அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்க முன்வைத்துள்ளார்.

இதன்படி, அரசுத்தலைவர்தேர்தலில்வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் தனிப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வையிட பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் தனிக் குழு நியமிக்கப்படும்.

பாதுகாப்புப் படைகளின் பிரதானி, காவல் மா அதிபர், தேசிய புலனாய்வுத் தலைவர் மற்றும் மூத்த பிரதி காவல் மா அதிபர் (தேர்தல்கள்) ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்படுவார்கள். இவர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து வேட்பாளர்களதும் முன்னாள் அரசுத் தலைவர்களதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பிரதிக் காவல் மா அதிபர் ஒருவரும் நியமிக்கப்படுவார்.


இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளை தடையின்றி ஒருங்கிணைக்க குழுவின் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்படவுள்ள பிரதிக் காவல் மா அதிபர் தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் நெருக்கமாக பணியாற்ற வேண்டும் என்பதும் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பரிந்துரையில் என்ன குறை, தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் முன்னாள் அரசுத் தலைவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது நல்லதுதானே என்று தோன்றும். அது உண்மையும்கூடத்தான். ஆனால், அது உள்ளூரில் காணப்படும் ஆபத்துக்கள், அச்சுறுத்தல்களின் மதிப்பீட்டின்படி மேற்கொள்ளப்படவேண்டியது.

இலங்கையில் வேட்பாளர்களுக்கோ அல்லது முன்னாள் அரசுத் தலைவர்களுக்கோ எந்தவித நேரடி அச்சுறுத்தலும் இதுவரையில் இல்லை. அல்லது எதிர்வரும் மாதங்களில் அதாவது தேர்தல் நெருங்கிவரும் நேரத்தில் அத்தகைய ஆபத்து வரலாம் என்கிற எந்த உளவு அறிக்கைகளும்கூட வந்ததாகத் தெரியவில்லை. அப்படியிருந்தும் இத்தகைய ஒரு பரிந்துரைக்கான அவசியம் ஏன் வந்தது?

அமெரிக்காவில் அரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடவுள்ளவரான டொனால்ட் ட்ரம் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டின் எதிர்வினையாகத்தான் இந்தப் பரிந்துரையை அரசுத் தலைவர் முன்வைத்துள்ளார்.

சொந்த அச்சுறுத்தல்களின் காரணமாக உள்நாட்டில் தலைவர்களுக்குப் பாதுகாப்பைப் பலப்படுத்துவது வேறு, ஏதோவொரு நாட்டில் தலைவர்களுக்கு அச்சுறுத்தல் என்பதற்காக இங்கு பாதுகாப்பை அதிகரிப்பது என்பது வேறு. அதனால்தான் இது தென்னையில் தேள் கொட்டினால் பனையில் நெறி கட்டிய கதையாக இருக்கின்றது.



# பற்களைக் காட்டு - உண்ட உணவைச் சொல்கிறேன்

**சோ. மோகனா**

நண்பர்களே இன்று மதியம் என்ன சாப்பிட்டீர்கள் என்று கேட்டால் யாருமே பதில் சொல்லி விடுவார்கள்.. சொல்லாவிட்டாலும் அவர்களது வயிறு அல்லது குடலுக்குள் உள்ள பொருள்கள் ஒருவர் என்னென்ன சாப்பிட்டார்கள் என்று சாப்பிட்ட உணவு பற்றிய பட்டியலைத் தரலாம். அதனை நாம் புரிந்துகொள்ள முடியும்.

### சாப்பிட்ட உணவைக் கூறும் பற்காரை

ஆனால் போனவாரம் வியாழக்கிழமை என்ன சாப்பிட்டீர்கள் என்று கேட்டால் சற்று விழிப்போம். ஆனாலும்கூட, கடந்தநூற்றாண்டில்வாழ்ந்தமனிதன்? அவனின் பல்!. அவன் அந்த காலத்தில் சாப்பிட்ட உணவு பற்றிய தகவல்களை துல்லியமாக எடுத்து வைக்கிறது என்றால் ஆச்சரியமாக இல்லையா? ஆனால் உணவை அரைத்த பல் அவன் சாப்பிட்ட உணவைச் சொல்ல முடியுமா? எப்படிச் சொல்ல முடியும்? என சவால் விடுகிறது அறிவியல்..!! அதுதான் தற்கால அறிவியல் கண்டுபிடிப்புகளின் அதிசயம்.

பற்காரை பொய் சொல்லுவதில்லை. 2018ஆம் ஆண்டின், ஜூலை 17ஆம் நாள் ஒரு கண்டுபிடிப்பு நிகழ்ந்தது. ஓர் அற்புதமான அறிவியல் உண்மையை நம் முன்னே பரப்பி வைக்கிறார்கள் நியூயார்க் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள். வளைந்த மஞ்சள் நிறமுள்ள, காரை படிந்த ஒரு மனிதனின்



பற்களை வைத்து, அவனது காலத்தில் உள்ள செடி கொடிகளையும், அவன் சாப்பிட்ட உணவையும் கணிக்கின்றனர் என்றால் ஆச்சரியம்தானே. பொதுவாக பிரிட்டிஷ்காரர்கள் பல், மற்றவர்கள் போல பளிச்சென்ற வெள்ளையில் மற்றவர்களைக் கட்டிப்போடாதாம்!. அந்த பற்காரை படிந்த அசிங்கமான, மங்கலான பற்களின் மேல் ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. அந்தப் பற்கள் இருந்த மண்டையோட்டின் காலம் இரும்பு காலமாக இருக்கலாம் எனவும் அறியப்பட்டது. இரும்புக் காலத்தில் பிரிட்டனில் நாய்களை வைத்து வேட்டையாடினர். (கி.மு.1200- - 1000) பார்லி, ஓட்ஸ் மற்றும் ரை என்ற தானியத்தாலான கஞ்சி வைத்தும் சாப்பிட்டு இருக்கின்றனர். ஆராய்ச்சியாளர்கள், மண்டையோட்டில் இருக்கும் பற்காரையை ஆராய்ந்ததில், ஓர் உண்மையைப் போட்டு உடைத்து இருக்கின்றனர். அதாவது அவர்கள் புரதப் பொருள்களை உட்கொண்டது பற்றிய உண்மைத் தகவல் நமக்கு இப்போது தெரிய வந்துள்ளது. பற்காரை சொல்லும் கதை அதுதான். அப்போது வாழ்ந்த நமது மூதாதையர் மனிதன் 25 வயது வரைதான் வாழ்ந்தானாம்.

### பற்காரை உருவாக்கம்

பற்காரை எப்படி உருவாகிறது தெரியுமா? நாம் சாப்பிடும் உணவு பல்லின் மேல் படிகிறது. அதுவே பற்காரையாக உருமாறுகிறது. நீங்க என்னதான் பல் துலக்கினாலும், என்னதான் நீங்க நாக்கை வைத்து துடைத்தாலும், நாம் உண்ணும் உணவு கொஞ்சமாவது, பல்லின் மேலே மெல்லிய பசை போல ஒட்டிக்கொள்ளும். (அந்த கால மனிதர்கள் பல் தேய்த்து இருப்பார்களா என்று நினைக்கிறீர்கள்? அதுதானே ஐயம்..!) அதன் மீது வாயில் உள்ள உமிழ் நீர் கலந்து படிந்து, பல்லில் படிந்துள்ள பொருள் வேதி மாற்றம் அடைகிறது. பின்னர் இதுவே உறுதியாகி, கடினமான பற்காரை ஆக மாறிவிடுகிறது. எனவே பல்லில் படிந்த உணவுத்துகள்கள், டார்டர்(tartar) என்னும் பற்காரை (dental calculus) ஆகிவிடுகிறது. இதுதான் பற்காரை உருவாக்கத்தின் வரலாறு.

### பற்காரை சொல்லும் பதில்

இங்கு மனிதவியல் ஆய்வாளர்களுக்கு ஏற்பட்ட சிக்கல், என்னவென்றால் அந்தக்கால மனிதனின் உணவுகளின் சான்றுகள், முக்கியமாக என்ன வகையான தாவரங்கள் அப்போது இருந்தன, என்ன தாவரங்களை விவசாயம் செய்தான் என்பதே. இங்கே அருங்காட்சியக பதிவு பற்றிய எவ்வித தகவலும் கிடைக்கவில்லை. அவர்கள் எவ்வித பதிவும் தருகிறார்போல பொருள்கள் அங்கு கிட்டவில்லை. ஆனால் மண்டையோட்டுப் பல்லில் இருந்த கரடுமுரடான, பற்காரையின் புரத துணுக்குகள், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த தாவரங்கள், அவர்கள் உண்ட உணவுகள் பற்றிய தகவல்களை, ஆய்வாளர்கள் சந்தேகப்பட்ட விஷயங்களுக்கெல்லாம் துல்லியமாகப் பதில் சொல்கின்றன.

### பற்காரையில் பால் புரதம்

இதற்கு முன்பாக, பற்காரை என்பது, அதில் பால் புரதங்கள் உள்ளன என்ற தகவலைச் சொல்லி இருக்கிறது. ஆனால், உலக சர்வதேச ஆய்வில் 2018ஆம் ஆண்டு, ஜூன் மாத கண்டுபிடிப்புதான், அதன் மூலம் முதன் முறையாக தெரிய வந்த தகவல். இதற்கு முன் கண்டறிந்ததைவிடத் துல்லியமாக அந்த உணவின் உள்ள அதிக புரதங்கள், தாவரங்கள் போன்றவற்றையும் அறியவே முடிகிறது. அதிலுள்ள பலவகை புரதங்களை அறியமுடிகிறது.



### மனித பரிணாம வளர்ச்சி சொல்லும் குட்டிப் பல்

இதன் மூலம் மனிதவியல் துறைக்கு ஒரு பெருமையும் கிட்டியுள்ளது. அது என்னவென்றால், அந்தக்கால மனிதர்கள் பற்றிய புதிய உணவு முறைகள், அதில் கலந்துள்ளவை பற்றி எல்லாம் தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது. இதில் ஒரு முக்கியமான விஷயம் துளியூண்டு பற்காரை உள்ள ஒரு சாதாரணப் பல், மனிதனின் இருப்பையும், மனிதனின் பரிணாம வளர்ச்சியைச் சொல்லும் அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்றால் அது எவ்வளவு பெரிய விஷயம், இதன் மூலம் அந்தக்கால மனித உணவின் ஆராய்ச்சியில் புதிய முயற்சியைப் புகுத்தத் தொடங்கியிருக்கிறது.

### அந்த ஊர் தாவரங்களின் கதை சொல்லும் பற்காரை

இந்த பற்காரைப்பற்றிய மேலும் ஒரு கருத்தையும், நியூயார்க்கின் தொல்லியல் துறை மூத்த அறிஞரான கலாநிதி காமில்லா ஸ்பெல்லர் சொல்லியிருக்கிறார், இந்த பற்காரை இன்னும் ஏராளமான கதைகளைச்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# பற்களைக் காட்டு - உண்ட உணவைச் சொல்கிறேன்

4ம் பக்க தொடர்ச்சி...........



சொல்லும் வாய்ப்பு இருக்கிறது என்கிறார். அதாவது அந்தக் காலத்தில், அந்த இடங்களில், அப்போது வாழ்ந்த பெரிய தாவர வகைகளின் மிச்ச சொச்சங்களுக்கான சான்றுகள் படிமங்கள் ஏதும் கிடைக்கவில்லை. ஆனால் இந்த பற்காரை மூலம், அப்போது பயிரிடப்பட்ட தாவர வகைகளை அறிவதற்கு உதவி செய்யும் என எண்ணுகின்றனர். மேலும் ஆதிகால தாவர வகை டிஎன்எ-வுடன், ஒப்பிட, அல்லது அப்போது அவர்கள் என்ன புரதப் பொருள்களைப் பயன்படுத்தினர் என்று அறியவும் இந்த பற்காரை பயன்படும். அந்த புரதப் பொருள்கள் பால் பொருள்களா, பாலாடைக்கட்டியா என்பதையும் அறிய முடியும் என்கின்றனர்.

## விக்டோரியன் கால பற்காரையும் உணவும்

பிரிட்டனில் கிடைத்த 100 தொல்லியல் பொருள்களில், 14 வகைப் பொருள்கள் பல்லில் பிரச்னையுள்ள நோயாளிகளின் பற்கள். அவைகளின் மூன்றில் ஒரு பகுதியிலிருந்தே அவர்கள் உண்ட புரதப் பொருள்களை அறிந்துகொள்வது எளிது எனக் கணிக்கின்றனர். கலாநிதி ஸ்பேல்லர் சொல்லும் சுவையான தகவல் என்ன தெரியுமா?.. அந்தகால பற்கள் மட்டுமல்ல, விக்டோரியன் காலத்தில் வாழ்ந்தவர்களின் பற்காறையிலிருந்தும்கூட, அவர்களின் உணவு, ஓட்ஸ், பட்டாணி, மற்றும் முட்டைக்கோசு வகை காய்கறிகள் என்றும் சொல்ல முடியும். இந்த பற்காரை அவர்கள் இந்த கஞ்சி வகைகளை உண்டதாலும் இருக்கக்கூடும் என்கிறார். மேலும் இப்போதுள்ள சான்றுகள் மூலம், பிரிட்டிஷ்காரரர்களின் உணவான உருளைக்கிழங்கு, சோயாபீன்ஸ், நிலக்கடலை மற்றும் பால் புரதங்கள் சாப்பிட்டுள்ளனர் என எளிதில் ஆய்வாளர்கள் தெரிவித்து விட்டனர்.

திறமைமிகு ஆய்வாளர் கலாநிதி ஜெஸ்ஸிகா ஹெண்டியின் கருத்து, ஜெர்மனியின் மாக்ஸ் பிளான்க் நிறுவன தொல்லியல்துறை கண்டுபிடிப்பின் முதல் பிதாமகரான கலாநிதி ஜெஸ்ஸிகா ஹெண்டி என்ன சொல்கிறார் தெரியுமா? 'இவ்வளவு விஷயங்கள் நமக்கு ஒரு சாதாரண பற்காரை மூலம் தெரிந்தாலும்கூட இதில் இன்னும் நமக்குத் தெரியவேண்டியது நிறையவே உள்ளது. ஆனால் இதில் நமக்கு மிக மிக வியப்பூட்டி உற்சாகப்படுத்தும் விஷயம், ஒரு சாதாரண, தொல்லியல் பற்காரை, எப்படிப்பட்ட அறிவியல் விஷயங்களை உள்ளடக்கியுள்ளது என்பதும், அதில் பொதுவாக தொல்லியல் துறை தடத்தில் கிடைக்காத உணவுப் பொருள்களை எல்லாம், எப்படி தன்னிடத்தில் இந்த பற்காரை சிக்கவைத்துத் தக்க வைத்துள்ளது என்ற அதிசயம்தான் நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது. அத்துடன் அந்த பற்காரை அந்தகாலத்தில்பதிவிடப்படாமல், இருந்தவாழ்ந்ததாவர உணவுகளைப்பற்றியும்நமக்குத்தெரிவித்தமைக்கும் நாம் இந்த பற்காரைக்கும் கூட அறிவியல் சார்பில் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்" என்கிறார். மனித இனம் நன்றி சொல்ல வேண்டியது நவீன அறிவியல் ஆய்வுகளுக்குத்தான்.

## ஆல்ப்ஸ் மலையின் ஓரத்தில்

1991ஆம் ஆண்டு ஆல்ப்ஸ் மலையில் நுமிகுஷ் எனப் பெயரிடப்பட்ட 5,000 ஆண்டுகள் பழமையான மனிதனின் உறைந்த, மம்மி செய்யப்பட்ட உடல் கண்டுபிடிக்கப்பட்டபோது ஆராய்ச்சியாளர்கள் அதிர்ஷ்டசாலி என்று கருதினர். அவரது வயிற்றிலிருந்து எடுக்கப்பட்ட பொருள்கள் வறண்ட குளிரால் நன்கு பாதுகாக்கப்பட்டிருந்தன. அது அந்த மனிதன் உண்ட - கடைசி ஆட்டு இறைச்சியை வெளிப்படுத்தியது. மேலும் அவன் வயிற்றில் மான் கறி மற்றும் கோதுமை போன்றவையும் இருந்தன. இவைகள் அவன் இறப்பதற்கு முன்னர் உண்டு இருக்கிறான் என்பதை நிரூபணம் செய்தது.

## உண்ட உணவைக் காக்கும் பற்காரை

ஆனால் பெரும்பாலும் நீண்டகாலமாக நமக்குக் கிடைப்பது இறந்தவர்களில் எஞ்சியிருப்பது எலும்புகள் மற்றும் பற்கள் மட்டுமே. மாக்ஸ் பிளான்க் நிறுவன ஹெண்டியின் குழு பற்காரை பற்றிய ஆய்வை மேம்படுத்துவதற்கான வழிகளைத் தேடுகிறது. பற்காரை உணவு மூலக்கூறுகளைக் கட்டி இழுத்துப் பாதுகாக்கிறது என்று அவர்கள் கூறினர். 'உணவுப் பொருள்களின் தடயங்கள் மனித வாயிலிருந்து நேரடியாகப் பெறப்படுகின்றன. குறிப்பிட்ட உணவுகளின் துல்லியமான ஆதாரங்களைத் தனித்துவமாக வெளிப்படுத்துகின்றன' என்று அவர்கள் தங்கள் அறிக்கையில் எழுதினர். அவர்கள் ப்ரோசீடிங்ஸ் ஆஃப் தி ராயல் சொசைட்டி பியில் குறிப்பிட்டனர். புரோட்டியோமிக்ஸ் எனப்படும் உயர் தொழில்நுட்ப அணுகுமுறையைப் பயன்படுத்தினர், இது ஒரு மாதிரியில் உள்ள குறிப்பிட்ட புரதங்களைப் பகுப்பாய்வு செய்கிறது. இங்கிலாந்தின் இரும்பு வயது மற்றும் தீவின் ரோமானிய ஆக்கிரமிப்புக்கு முந்தைய 38 மாதிரிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவை மீண்டும் ஆய்வு செய்தனர்.

## சவாலான ஆய்வு

18 மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளில் இறந்தவர்களின் பற்களிலிருந்து மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்ய புதிய புரதம் பிரித்தெடுக்கும் முறையைப் பயன்படுத்தினர். அதேபோல் இப்போது வாழும் அல்லது சமீபத்தில் இறந்தவர்கள். 'பல் கால்குலஸின் மொத்தம் 100 தொல்பொருள் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன' என்று அவர்கள் எழுதி இருக்கின்றனர். மனித புரதங்களை உணவுப் புரதங்களிலிருந்து பிரிப்பது ஒரு சவலான செயலாகும். அவர்கள் வேறுபடுத்திக் காட்டக்கூடிய ஒரே இறைச்சி மாதிரியானது மான் இறைச்சியின் ஒரு நிகழ்வு மட்டுமே. இறைச்சி அரிதாகவே உண்ணப்பட்டதா, அல்லது இயற்கையாகவே மனிதனின் வாயில் காணப்படும் மனித புரதங்களிலிருந்து விலங்கு புரதங்களைக் கூறுவதற்கு தற்போதைய முறைகளைப் பயன்படுத்துவது மிகவும் கடினம் என்பதனாலா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

பழங்கால மாதிரிகளில் முட்டைக்கோஸ் குடும்பத்தைச் சேர்ந்த ஓட்ஸ், பட்டாணி மற்றும் தாவரங்களிலிருந்து வரும் புரதங்களை ஹெண்டியின் குழு கண்டறிந்தது. நவீன மாதிரிகளில், உருளைக்கிழங்கு, சோயாபீன்ஸ் மற்றும் வேர்க்கடலை ஆகியவை பொதுவானவை.

## பால் புரதம் உண்ட மனிதர்கள்

'சுவாரஸ்யமாக, இந்த ஆய்வில் பால் புரதங்கள் எல்லா நேரங்களிலும்தொடர்ந்துகண்டறியப்படுவதையும், பண்டைய மற்றும் நவீன நபர்களில் ஒட்டுமொத்தமாக 20% நபர்களில் கண்டறியப்படுவதையும் நாங்கள் கவனிக்கிறோம்' என்று ஹெண்டியின் குழு எழுதியது. வட ஐரோப்பியர்கள் பொதுவாக ஒரு மரபணு மாற்றத்தைக் கொண்டு செல்கிறார்கள். அது அவர்கள் பால் குடிக்கவும், இளமைப் பருவத்தில் நன்கு பொறுத்துக்கொள்ளவும் அனுமதிக்கிறது. பால் குடிக்கும் திறன் மக்களுக்கு உயிர்வாழும் நன்மையைக் கொடுத்ததாக விஞ்ஞானிகள் நம்புகின்றனர். மக்கள் என்ன சாப்பிட்டார்கள் மற்றும் உணவு முறைகள் எப்படி மாறிவிட்டன என்பதைப் புரிந்துகொள்வதுநீண்டகாலமாகப்போய்விட்டகலாசாரங்களின் தெளிவான படத்தை வரைவதற்கு உதவும். கல்லறைகளில் உள்ள பீங்கான் சமையல் பாத்திரங்கள் மற்றும் அவற்றில் எஞ்சியிருக்கும் எச்சங்களை ஆய்வாளர்கள் பகுப்பாய்வு செய்யலாம். சில வகை உணவுகளின் இரசாயன கையொப்பங்களைக் கண்டறிய அவர்கள் முடி மற்றும் எலும்புகளைப் பகுப்பாய்வு செய்யலாம். ஆனால் பற்களில் உள்ள கடினமான பற்காரைகளை பகுப்பாய்வு செய்வது என்பது உண்மையில் மக்களின் வாயில் உணவாக என்ன சென்றது என்பதற்கான தனித்துவமான படத்தை அளிக்கிறது, ஹெண்டியின் குழு ஆழமாகவே குறிப்பிட்டது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# காத்தான்குடியில் குண்டு வெடிப்பு பொலிஸார் தீவிர விசாரணை

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூநொச்சிமுனை கிராமத்தில் உள்ள வீடொன்றினுள் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவம் குறித்து பொலிஸார் பல கோணங்களில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த வெடிப்பு சம்பவம் திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்தநிலையில் தடவியவியல் பிரிவு பொலிஸார் வரவழைக்கப்பட்டு அவர்கள் மேற்கொண்ட சோதனையில் வீட்டின் பின்பகுதியிலுள்ள கூரைப் பகுதியில் இந்தக் குண்டு வெடித்துள்ளதைக் கண்டறிந்துள்ளனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

# யாழ்ப்பாணம் கீரிமலையில் விபத்து இரு பெண்கள்,குழந்தைக்கு காயம்



யாழ்ப்பாணம் கீரிமலை பகுதியில் திங்கட்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிளில் விபத்தில் குழந்தையொன்றும் இரு பெண்களும் காயமடைந்துள்ளனர்.

வீதியில் மோட்டார் சைக்கிளில் குழந்தையுடன் பயணித்த இரு பெண்களை பின்னால் வேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றில் பயணித்த இரு இளைஞர்கள் மோதி விட்டு, அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இளைஞர்கள் இருவரும் போதையில், நிதானமின்றி மோட்டார் சைக்கிளை விபத்தை ஏற்படுத்தும் விதமாகவும், வீதியில் பயணித்தோருக்கு இடையூறு விளைவிக்கும் விதமாகவும் ஓட்டிச் சென்றனர் எனவும், அவ்வாறு மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தே, முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளை மோதித்தள்ளி விட்டுத் தப்பிச் சென்றனர் எனவும் விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில், விபத்தை ஏற்படுத்தி விட்டுத் தப்பிச் சென்ற மோட்டார் சைக்கிளை இனம் கண்டுள்ளதாகவும், விபத்தை ஏற்படுத்திய இருவரையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# சைவப்புலவர் பட்டமளிப்பும் சைவ மாநாடும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடாத்தும் சைவப்புலவர் பட்டமளிப்பும் சைவமாநாடும் ஜூலை 21 ஞாயிற்றுக்கிழமை காலை 8 .30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் தலைமையில் இடம்பெற்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தப் பரமாச்சாரிய சுவாமிகள் திருமுன்னிலையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப்பல்கலைக்கழக இந்துக்கற்கைகள் பீட பீடாதிபதி பிரம்மஸ்ரீஊ ஸ. பத்மநாதனும் சிறப்பு விருந்தினர்களாக நீர்வைக்கந்தசுவாமி ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்கள், வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலய பிரதமகுரு சுந்தர ஸ்ரீரங்கநாதக்குருக்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தி.செல்வமனோகரன், கௌரவிருந்தினராக க.கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள் .

சைவாகமபூஷணம் விருதினை சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்கள் சிவஸ்ரீ சுந்தர ஸ்ரீரங்கநாதக்குருக்கள் ஆகியோர் பெற்றுக் கொள்கின்றார்கள் .

சிவநெறிப்புரவலர் விருதை க.கனகரத்தினம் பெற்றுக்கொள்கின்றார்.

சைவப்புலவர் பட்டத்தினை மூ.சிவகுமரன், க.கைலநாதன், கு.கந்தபாலன், த.சுதர்சன் ,திருமதி சிவப்பிரியா ராஜ்குமார் ,திருமதி பராபரம் துளசிரஞ்சன் ,சிவஸ்ரீ குமாரசாமிசர்மா சுவாமிநாதசர்மா ,,செல்வி கியோமிதா தவநேசன் ,திருமதி சிவதர்சனி அகிநாத் ஆகியோரும் இளஞ்சைவப்புலவர் பட்டத்தினை ம. வினோக்ஷன் ,அ.சதீஸ்குமார் , செல்வி யோகமனி கனகேந்திரன் , செல்வி தர்சிகா நடராசா , சு.ஸர்காந் , செல்வி நிலாந்தினி அழகேந்திரன் , செல்வி பானுப்பிரியா தில்லைமணி, செல்வி கீர்த்திகா றஞ்சன் ஆகியோர் பெற்றுக்கொள்ளவுள்ளார்கள். சைவமாநாட்டு சிறப்புரையினை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தி.செல்வமனோகரன் நிகழ்த்தவுள்ளார்.

சைவப்புலவர் வ.தயாபரசிவம் எழுதிய செய்யுள் இலக்கணம் நூல் வெளியீடு இடம்பெறும். பண்ணிசைமணி சி.தில்லைமணி சைவப்புலவர் கலாவித்தகர் கவிதா கதிரைமலை ஆகியோரின் பண்ணிசைக் கச்ஹிசி நிகழ்வும் இடம்பெறவுள்ளது. நன்றியுரையினை அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் வழங்கவுள்ளார். (05)

# சீன நன்கொடை அரிசி கிளிநொச்சிக்கு வந்தது





இலங்கைக்கு சீன அரசாங்கம் ஒருதொகை அரிசியை நன்கொடையாக வழங்கியுள்ளது.

அந்தவகையில் இந்த அரிசி அடங்கிய இரண்டு கொள்கலன்கள் கனர வாகனமொன்றில் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்டத்தை வந்தடைந்தது.

இந்த அரிசி கடற்றொழில் திணைக்களம் ஊடாக 2,978 கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு விநியோகம் செய்யப்படவுள்ளது.

மேலும் எதிர்வரும் நாள்களில் பளை, கண்டாவளை, பூநகரி, நாச்சிக்குடா ஆகிய நான்கு கடற்றொழில் அலுவலகங்கள் ஊடக இந்த அரிசி விநியோகம் செய்யப்படவுள்ளது. (05-113)



## நடுத்தர ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைவடைதல் என்பது பொருட்களின்விலைஅதிகரிக்கும்வேகம்குறைவடைவதாகும். மாறாகபொருட்களின் விலை குறைவடைவதைக் குறிக்காது. மறுபுறம் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்குப் பதிலாக அவற்றின் எடை குறைக்கப்பட்டுள்ளது.

நடுத்தர மக்கள் 79 சதவீத மானோர் கடந்த காலத்தைவிட தற்போது சந்தோஷமாக வாழவில்லை என்றும் அந்த ஆய்வில்வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றுக்கு தீர்வு காண்பதற்கு அடிப்படைப்பிரச்சினைகள்தீர்க்கப்பட வேண்டும். நாணயநிதியத்துடனான ஒப்பந்தத்துக்கமையஎவ்வாறுஇந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது என்பதுகுறித்தும்சிந்திக்கவேண்டும். அதிகவருமானம்பெருவோருக்கான வருமான வரியை தற்காலிகமாக அதிகரித்து, ஏனையோருக்கு நிவாரணங்களை வழங்க முடியும்.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் அனைவரும்நியாயமானவரிசலுகை திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். நாம்யதார்த்தமானவாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கியுள்ளோம். ரணில்விக்கிரமசிங்கவையெழுத்திட்டுள்ள இணக்கப்பாட்டு ஒப்பந்தத்துக்குள்ளேயே எமக்கும் செயற்பட வேண்டியேற்படும். அவ்வாறில்லை என்றால் நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாது. எவ்வாறிருப்பினும் அதில் நியாயமான மாற்றங்களை ஏற்படுத்வோம் என்றார்.

## விரைவாக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழுவிடம் நாங்கள் கோரிக்கை விடுத்திருக்கிறோம். ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்க சுயாதீன வேட்பாளராகவே போட்டியிட இருக்கிறார். அதில் அனைவரும் கலந்துகொள்ள முடியும்.

ரணில் விக்ரமசிங்கவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியோ தேசிய மக்கள் சக்தியோ எந்தவகையிலும் சவால் இல்லை. ஐக்கிய மக்கள் சக்திக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் விரைவாக தேர்தல் தோல்வியை பொறுப்பேற்க இருக்கின்றன. அதனாலே நாங்கள் விரைவாக தேர்தலை நடத்துமாறு தெரிவிக்க இங்கு வந்தோம்.

இடம்பெறஇருக்கும்ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க வரலாற்று சாதனை வாக்குகளை பெற்றுக்கொண்டுவெற்றிபெறுவார். அதில் சந்தேகம் இல்லை. தேர்தலை பிற்போடுவதற்கு நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தேர்தலைபிற்போடுமாறுநீதிமன்றில் மனு தாக்கல் செய்தது எதிர்க்கட்சித் தலைவருடன் இருப்பவராவார். சதித்திட்டம் மேற்கொண்டு ரணில் விக்ரமசிங்கவை நெருக்கடிக்குள்ளாகவே இவர்கள் முயற்சிக்கின்றனர். இதற்கு மக்கள் ஏமாறப்போவதில்லை.

தேர்தல் ஆணைக்குழு ஜனாதிபதி தேர்தலுக்கான திகதியை அறிவித்தவுடன் நாங்கள் எமது வேட்பாளரை உத்தியோகபூர்வமாக அறிவிப்போம். என்றாலும் ரணில் விக்ரமசிங்க போட்டியிட வேண்டும் என நாங்கள் அவரை கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

## 1,300...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

தற்போது இலங்கையில் 24,000பேர் அரசவைத்தியர்களாக இருக்கின்றார்கள். வெகுவிரைவில் 3,500 பேர் வைத்தியர்களாக வெளியேறவுள்ள நிலையில் அவர்களுக்கான வைத்தியர் நியமனங்களை வெகுவிரைவில் வழங்கவுள்ளோம்.

ஒவ்வொரு ஆண்டும் 3,000 பேர் வைத்தியர்களாக வெளியேறுகின்றனர், இதனால் அரச வைத்தியசாலையில் நிலவும் வைத்தியர் வெற்றிடங்களை நிரப்பக்கூடியதாக இருக்கின்றது. தற்போது 24 ஆயிரம் வைத்தியர்கள் அரச வைத்தியசாலைகளில் பணிபுரிகின்றனர். எனினும் தற்பொழுது துறைசார்ந்த வைத்திய நிபுணர்கள் நட்டைவிட்டு வெளியேறியமை பெரும் பிரச்சினையாக காணப்படுகின்றது.

துறைசார்ந்த வைத்திய நிபுணர்களின் பற்றாக்குறை காரணமாக நாட்டின் சில இடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. எனினும், கடந்த சில மாதங்களில் நாட்டை விட்டு வெளியேறிய 10- முதல் 15 வரையிலான வைத்தியர்கள் நாட்டிற்கு மீளவும் வருகைதந்து மீண்டும் பணிகளில் ஈடுபட்டுள்ளார். இது எமக்கு நல்ல ஆரோக்கியமான விடயமாக அமைந்திருக்கின்றது என்றார்.

## வெறுக்கத்தக்க ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதியின் பதவி காலம் மற்றும் நாடாளுமன்றத்தின் பதவி காலம் குறித்து அரசமைப்பின் 30(3) உப பிரிவு மற்றும் 62(2) உப பிரிவில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விரு உறுப்புரைகளும் அரசமைப்பின் 83(ஆ) உறுப்புரையுடன் முரணாக காணப்படுவதால் இதனை திருத்தம் செய்வதாக குறிப்பிட்டுக் கொண்டு அரசமைப்பின் 22 ஆவது திருத்தத்தைக் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இல்லாத சிக்கல்களை தோற்றுவிக்கும் வகையில் ஆளும்தரப்புச் செயற்படுகிறது.

அரசமைப்பின் 22ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மக்கள் வாக்கெடுப்புக்கும் செல்லவேண்டும். ஒருவேளை இந்த திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் 30 நாட்களுக்குள் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும்.

22ஆவது திருத்தத்தை அவசரச் சட்டமாக நாடாளுமன்றத்தில் முன்வைக்கமுடியாதுஎனஅரசமைப்பின் 122 (3) உப பிரிவில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திருத்தத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையிலும் இன்னும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளநிலையில்தேர்தலுக்குநெருக்கடிகளை ஏற்படுத்தும் வகையில் ஆளும்தரப்புச் செயற்படுவது முற்றிலும் வெறுக்கத்தக்கது. தேர்தல்கள் ஆணைக்குழு இன்னும் 13 நாட்களில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் திகதியை உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும் - என்றார்.

## நீர்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பது மின் கட்டணத்தைச்சார்ந்து இருக்கும் துறையாகும். எனவே, நீர் கட்டணத்தைக் குறைக்க இந்த மின் கட்டண திருத்தம் உதவும் என நம்பப்படுகிறது.

நீர் வழங்கல் பல்வேறு காரணிகளைப் பொறுத்து அமைகின்றது. மின் கட்டணம் குறைக்கப்பட்டால், நீர்க் கட்டணமும் குறைக்கப்படும் என, நாம் ஏற்கனவே உறுதியளித்தோம். தற்போது, வட்டி விகிதங்கள் 26% இல் இருந்து 11% ஆக குறைந்துள்ளன. அதனை கருத்தில் கொண்டும் டொலரின் பெறுமதியின் அடிப்படையில் நீர்க் கட்டணத்தை குறைப்பது குறித்து ஆராயப்படுகிறது. நீர் வழங்கல் சபைக்குத்தேவையான இரசாயனப் பொருட்களின் விலைகள், டொலரை வைத்தே தீர்மானிக்கப்படுகிறது என்பதைக் கூற வேண்டும். இந்த வாரத்திற்குள் நீர்க் கட்டணத்தை எவ்வளவு குறைக்கலாம் என்பது குறித்து முடிவு செய்ய முடியும்.

2023 ஜனவரி மாதத்தில் நான் இந்த அமைச்சைப் பொறுப்பேற்ற போது, 1000 புதிய தொடர்புகளையேனும் வழங்க முடியவில்லை. 800மில்லியன்டொலர்கடனுடனும், சுமார் 2.8 பில்லியன் ரூபா மாதாந்த நட்டத்துடனும் நீர் வழங்கல் சபையுடனான அமைச்சு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.4.5 பில்லியன் ரூபா மாதாந்த தொடர் செலவினங்களைச் செய்யும் நீர் வழங்கல் சபையானது நாட்டில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது.

தற்போது, நாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளோம். அது மாத்திரமன்றி எமது இணைப்புகளை 113,000 வரை விரிவுபடுத்தியுள்ளோம். வரும் வாரங்களில் மேலும் 30,000 இணைப்புகளை வழங்க எதிர்பார்க்கிறோம். நீர் வழங்கல் சபையை மாதாந்தம் 2.8 பில்லியன் ரூபா நட்டத்தில் இருந்து 6.2 பில்லியன் ரூபா மாதாந்த இலாபம் ஈட்டுக்கும் நிலைக்கு மாற்றியுள்ளோம். 4.5 பில்லியன் ரூபா தொடர்ச்சியான செலவீனத்துடன் எஞ்சிய தொகை கடன் சேவைக்காக பயன்படுத்தப்பட்டு நீர் வழங்கல் துறை நிலைபேறான நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் மூலம், கொள்கை அடிப்படையிலான கடனாக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 100 மில்லியன் டொலர்களைப் பெற்றுள்ளோம். அதற்கு இணையாக, நீர் வழங்கல் துறைக்கும், உபவேலைத்திட்டத்தை முன்னெடுக்க நாம் தயாராக உள்ளோம்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் மறுசீரமைப்பு முன்மொழிவுகளான நீர்க் கட்டண சூத்திரம் மற்றும் முதலீட்டுக் கட்டமைப்பு அளவுகோல்களுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிறைவேற்று சபையால் அது அங்கீகரிக்கப்பட்டவுடன் மேலும் 100 மில்லியன் டொலர்கள் கிடைக்கும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.மேலும், நீர்க் கட்டணத்தை செலுத்துவதில் பாதிக்கப்படக்கூடியவர்களையும் மிகவும் ஏழ்மையான மக்களையும் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். சேவை நிறுவனங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள மருத்துவமனைகள், பாடசாலைகள் மற்றும் மத நிறுவனங்களுக்கும் மானியங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 'அஸ்வெசும' வேலைத்திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதுடன், தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு மற்றும் காணி உரிமைகளை வழங்குவது தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்துவது தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஜனாதிபதி மேற்கொண்டு வரும் வேலைத்திட்டங்களில் மலையக மக்கள்நம்பிக்கைஅடைந்துள்ளனர். மலையகமக்களுக்குபிரச்சினைகள் இருந்தாலும், நாங்கள் சரியான பாதையில் செல்கிறோம் என்ற நம்பிக்கை உள்ளது. இன்று மலையக மக்களின் தீர்க்கப்பட வேண்டிய பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

இன்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு வருகைதந்தஎதிர்கட்சிபாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கிறேன். கடந்த வருடம் இவ்வாறானதொரு கலந்துரையாடலுக்குமலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும்பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தாலும், எதிர்கட்சியில் உள்ளவர்கள் அரசியல் காரணங்களுக்காக அதில் கலந்துகொள்ளவில்லை. ஆனால் இம்முறை அவர்கள் வருகை தந்திருந்தார்கள். தற்போது ஜனாதிபதி முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் வெற்றிபெற்றுவருகின்றமைகுறித்து அவர்களுக்கும் தெரிந்துள்ளது. இதன் காரணமாக இப்போது எங்களுக்கும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. மலையக மக்களுக்கு பிரச்சினைகள் இருந்தாலும் கூட நாம் சரியான பாதையில் செல்கிறோம் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. நாம் பல்வேறு சிக்கல்களை கடந்து வந்துள்ளோம். எதுவும் சுலபமாக கிடைப்பதில்லை. ஜனாதிபதி ரணில் விகரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் பெரும்பாலான பெருந்தோட்ட நிறுவனங்கள் சம்பளத்தை உயர்த்த ஒத்துக்கொண்டுள்ளன. அடுத்த மாதம் பெருந்தோட்ட நிறுவனங்கள் மற்றும் தொழில் அமைச்சுடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. அதில் முழுமையான தீர்வு எட்டப்படலாம் என்ற நம்பிக்கை உள்ளது.

மேலும், எமது நீண்டநாள் கோரிக்கையின் பிரகாரம் காணி உரிமை விடயம் தொடர்பில் ஜனாதிபதி கடந்த திங்கட்கிழமை அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை சமர்ப்பித்திருந்தார். அதுகுறித்துஇன்று ஜனாதிபதியுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது. மலையகத்தில் அதிகளவான குடும்பங்கள் வாழும் பிரதேசங்களுக்கு ஒரு கிராம உத்தியோகத்தர்என்றஅடிப்படையில் இருப்பதால்தான் எந்த அரசாங்கம் ஆட்சிக்குவந்தாலும்அரசாங்கத்தின் நலன்புரிநலன்கள்அந்தமக்களுக்கு சென்றடைவதில்லை. இதற்கு காரணம் மலையக மக்களுக்கு பிரஜா உரிமை கிடைக்க முன்னர் மேற்கொள்ளப்பட்ட காணி எல்லை நிர்ணயத்தில் உள்ள சிக்கல் நிலையாகும். அதனால் மலையக மக்களின் முன்னேற்றம் தடைப்பட்டுள்ளது. இப்பிரச்சினையைத் தீர்க்கவே மலையகப் பிரதேசங்களை கிராமங்களாக அங்கீகரிக்கும் வேலைத்திட்டத்தை ஜனாதிபதி அமைச்சரவைப் பத்திரத்தில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மலையக மக்களுக்கு வீட்டு உரிமையே முதலில் வழங்கப்பட வேண்டும் என்று ஒரு சிலர் குறிப்பிடுகின்றனர். ஆனால், வீட்டு உரிமை என்பது வேறு. காணி உரிமை என்பது வேறு. காணி உரிமை வழங்கப்பட்டால் வீடுகளை நிர்மாணிக்கக் கூடிய வசதி உள்ளவர்கள் அவர்களுக்கான வீடுகளை நிர்மாணிக்கும் உரிமை கிடைக்கும். மலையக மக்களுக்காக 4000 மில்லியன் நிதி கடந்த வருடம் ஒதுக்கப்பட்டது. இந்த நிதியின் ஊடாக 1000 காணி உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்துவருகிறோம். ஏற்கனவே வீடுகள் இருந்தும் காணி உறுதிப் பத்திரங்கள் இல்லாதவர்களுக்கும் இந்த வேலைத்திட்டத்தின் மூலம் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்க எதிர்பார்த்துள்ளோம். எனவே சரியான தீர்மானங்கள் ஊடாக நாட்டைக் கட்டியெழுப்பியவருக்கே எதிர்கால ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவுவழங்கவேண்டும்என்பதே எனது தனிப்பிட்ட நிலைப்பாடாகும்' என்றார்.

## வேட்பாளர்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டொனால்ட் டிரம்ப் தாக்கப்பட்ட நிலையில், இலங்கையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பிரத்தியேகப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் இந்தப் பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஜனாதிபதித் தேர்தலில் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் குறித்த வேட்பாளர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் பிரத்தியேகப்பாதுகாப்புஏற்பாடுகளை மேற்பார்வையிட பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் இந்தக் குழுவை நியமிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படைகளின் பிரதானி, பொலிஸ் மா அதிபர், தேசிய புலனாய்வுத் தலைவர் மற்றும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் (தேர்தல்கள்) ஆகியோரை குழுவின் ஏனைய உறுப்பினர்களாகப் பரிந்துரைக்க முன்மொழியப்பட்டுள்ளது.

மேலும், ஜனாதிபதித் தேர்தல் காலத்தில், ஜனாதிபதி வேட்பாளர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் பிரத்தியேகப் பாதுகாப்பை உறுதிசெய்வது குறித்த சகல செயற்பாடுகளையும் ஒருங்கிணைக்க பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதவிக்கு குறையாத பொலிஸ் அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிடவும் முன்மொழியப்பட்டுள்ளது.

இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளை தடையின்றி ஒருங்கிணைக்க மேற்கூறியகுழுவும்நியமிக்கப்படும் பொலிஸ் அதிகாரியும், தேர்தல் ஆணைக்குழுவுடன் நெருக்கமாக பணியாற்ற வேண்டும் என்றும் குறித்த பரிந்துரையில் முன்மொழியப்பட்டுள்ளது.

## அரசியல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெண் பிரதிநிதிகளுக்கு ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க போட்டியிட வேண்டும் என தெரிவித்து, வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பெரும் கூட்டங்களை நடத்திவருகின்றனர். பதுளை, கண்டி, களுத்துறைபோன்றமாவட்டங்களில் இடம்பெற்ற கூட்டங்களில் உரையாற்றிய அனைவரும் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்க போட்டியிட வேண்டும்என்றகோரிக்கையையே முன்வைத்தனர். இதுதான்மக்களின் கோரிக்கையாகவும் இருக்கிறது.

எமது கட்சி தலைவர் என்ற வகையில் ரணில் விக்ரமசிங்க சுயாதீன வேட்பாளராக போட்டியிட வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் தெரிவித்து வருகிறோம். எமது கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு ரணில் விக்ரமசிங்க இன்னும் சில நாட்களில் உத்தியோகபூர்வமாக அந்த அறிவிப்பை வெளியிடுவார் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இன்னும் அறிவிப்பு விடுக்கப்படாத நிலையில் இரண்டு கட்சிகள் பெரும் தேர்தல் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றன. அவர்களின் கூட்டங்களுக்கு மக்கள் அதிகமாக சேர்வது தொடர்பில் நாங்கள் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. பிரசார கூட்டங்களுக்கு அதிகமான மக்கள் வருகிறார்கள் என்பதை கண்டு, அவர்களுக்கு மக்கள் ஆதரவு இருக்கிறது என நினைக்க முடியாது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் நாங்கள் காலிமுகத்திடல் நிரம்ப மக்களை அழைத்து வந்தோம். ஆனால் எங்களுக்கு தேர்தலில் வெற்றி பெற முடியவில்லை. அதனால் மக்களுக்கு உண்மை நிலையைதெளிவுபடுத்தவேண்டும். பெண்கள் தங்களின் கிராமங்களில் இவ்வாறான தெளிவுபடுத்தல்களை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் ஐக்கியதேசியகட்சிஇன்னும்தேர்தல் பரப்புரையை ஆரம்பிக்கவில்லை.

மேலும், எமது நாட்டில் அரசியல் தீர்வைப்பெற்றுக்கொடுக்கஅதிகமான தலைவர்கள் இருக்கிறார்கள். ஆனால், வீழ்ச்சியடைந்திருக்கும் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ரணில்விக்ரமசிங்கவுக்குமாத்திரமே முடியும். அதற்கான அனுபவமும் திறமையும்ரணில்விக்ரமசிங்கவிடம் மாத்திரமே இருக்கிறது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர்நாடுஇருந்தநிலையையும் தற்போது நாட்டின் பொருளாதார நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் மக்களுக்கு உண்மை நிலையை அறிந்துகொள்ள முடியும். அதற்கு காரணமாவர் யார் என்பதையும் மக்களால் புரிந்துகொள்ள முடியும். அதனால் மக்கள் இந்த இறுதி சந்தர்ப்பத்தை தவறவிடாது ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முன்வர வேண்டும் என்றார்.

## வான் மோதியதில் பெண் ஒருவர் சாவு



(எப்.முபாரக்)

கந்தளாய் அக்போபுர கித்துள் ஊற்று பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.



கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்துதிருகோணமலை நோக்கிச் சென்ற வான் மோதியதில் குறித்த பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று (புதன்கிழமை) காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய்கித்துளூத்துபகுதியைச் சேர்ந்த 73 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கித்துல் ஊற்று பகுதியில் அதே இடத்தில் கடந்த பதினைந்து நாள்களில் மூன்று விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன எனவும், பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வான் சாரதி தூங்கியதால், சாலையோரம் நடந்து சென்ற பெண் மீது மோதியதில் பெண் உயிரிழந்திருக்கலாம்எனமுதற்கட்ட விசாரணையில்தெரியவந்துள்ளது.

மேலதிகவிசாரணைஅக்போபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## மோகனராஜா ஓய்வுபெற்றார்



(வி.ரி. சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராக மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றி தனது 32 வருட சேவையை வழங்கி ஓய்வுபெறும் தெய்வநாயகம் மோகனராஜாவைக் கௌரவிக்கும்நிகழ்வுதிங்கட்கிழமை பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.





அனைத்து பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவரது சேவை பற்றி பலரும் உரையாற்றினார்கள்.

இறுதியாக சேவையை வியந்து பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள்.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# 'பன்முக ஆளுமை காதர் வாழ்வும் பணியும்' நூல் வெளியீட்டு விழா ஓட்டமாவடியில்




(எச்.எம்.எம்.பர்ஸான்)

ஓட்டமாவடி பகுதியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.ஏ.காதர் பற்றிய 'பன்முக ஆளுமை ஏஎம்ஏ. காதர் வாழ்வும் பணியும்' எனும் தலைப்பிலான நூல் வெளியீட்டு விழா ஓட்டமாவடி தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில் கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்றது.

ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.எம்.அஸ்ரப், ஓய்வுபெற்றஆசிரியர்ஐ.எல்.ஜமால் ஆகியோர்நூல்தொகுப்பாசிரியர்களாகசெயற்பட்டனர்.






சித்தி நபீஸா அறக்கட்டளை பணிப்பாளர் எம்.ஏ.சீ.மர்சூக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில்,வரவேற்புரையைநூல்தொகுப்பாசிரியர் எம்.ரீ.எம்.அஸ்ரப் நிகழ்த்தியதோடு, நூல் அறிமுக வுரையை ஐ.எல்.ஜமால் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில், அதிதிகளாகக் கலந்துகொண்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி, பேராசிரியர் எம்.சீ.ஏ.நாஸர், வரலாற்றில் ஓர் ஏடு புகழ் மௌலவி எம்.எச்.எம்.புஹாரி, ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி எஸ்.லோகேஸ்வரி ஓய்வுபெற்ற அதிபர் என்.எல்.எம்.மன்சூர் ஆகியோர்கள் சிறப்புரையை நிகழ்த்தினார்கள்.

தனது 86 ஆவது வயதை எட்டியுள்ள முன்னாள் ஓட்டமாவடி தேசிய பாடசாலையின் அதிபரும், ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளருமான ஏ.எம்.ஏ. காதர் பிரதேச கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியுள்ளார்.

அவர் வாழும் போது அவரை கௌரவிக்கும் நோக்கில் அவர் பற்றிய இந்த சிறப்பு நூல் வெளியீட்டு விழா நிகழ்வுக்கு கல்வியியலாளர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.(05)

# இளம் யுவதி குளிக்கும்போது கைத்தொலைபேசியில் வீடியோ எடுக்க முயன்ற சம்பவத்தினால் பரபரப்பு

வவுனியாவில் அரச ஊழியரான இளம் யுவதி ஒருவர் தங்கியிருக்கும் தனியார் வாடகை வீட்டில் குளிப்பதை தொலைபேசியில் வவுனியா பல்கலைக்கழக போதானாசிரியர் ஒருவர் வீடியோ எடுக்க முயன்ற சம்பவம் ஒன்று வீடியோவாக வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வவுனியாவில் அரச ஊழியராக வேலை செய்யும் சகோதர மொழி ஊழியர் ஒருவர் வவுனியா, திருநாவற்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சில யுவதிகளுடன் இணைந்து தங்கியுள்ளார். குறித்த வீட்டில் வவுனியா பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பிரிவில் போதானாசியராக பணியாற்றும் ஒருவர் குழு வகுப்புக்கள் நடத்தி வருகின்றார்.

குறித்த வீட்டில் அவர் வெளியில் கற்பித்துக் கொண்டிருந்த போது சகோதர மொழி அரச ஊழியரான யுவதி ஒருவர் குளியலறைக்குள் சென்று குளித்துள்ளார். இதன்போது குளியலறைப் பக்கம் சென்ற போதனாசிரியர் குளியறையின் மேல் துவாரத்தின் ஊடாக கைத்தொலைபேசியை உயர்த்தி வீடியோ எடுக்க முயன்றுள்ளதுடன், அதன் பின் குளியலறையின் மறுபக்கம் தவன்று சென்றுள்ளார். அந்த அரச ஊழியரான இளம் யுவதி சத்தம் கேட்டு வெளியில் இருந்த சக யுவதிகளை அழைத்த போது குறித்த போதானாசிரியர் குனிந்து ஓடியபடி வெளியேறியுள்ளார். குறித்த காட்சிகள் வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சிசீரீவியில் பதிவாகியுள்ளது. (05, 100)

# ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் கிராண்ட்பாஸ் பகுதியில் கைது

கொழும்பு, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறிபாலபிந்துமாவத்தை பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்தனர்.

கிராண்ட்பாஸ் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர்.

மிதிகம மற்றும் வெல்லம்பிட்டி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 22 மற்றும் 31வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 22 கிராம் 920 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர். (05)

# பட்டம்பிட்டியில் விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு.



(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலய பிரிவுக்குட்பட்ட 14 விவசாய அமைப்புக்களின் சம்மேளனமான பட்டம்பிட்டி திட்ட முகாமைத்துவ குழு ஏற்பாடு செய்த சம்மாந்துறை பிரதேச புதிய நீர்ப்பாசன பொறியியலாளருக்கான வரவேற்பும், கௌரவிப்பும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை நெய்னாகாடு பிரதேசத்தில் பட்டம்பிட்டி திட்ட முகாமைத்துவ குழுவின் தலைவரும், திருகோணமலை மாவட்ட பிரதம உள்ளக கணக்காய்வாளருமான ஏ.எல். மஹ்ரூப் தலைமையில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச நீர்ப் பாசன பொறியியலாளராக பொறுப் பேற்றிருக்கும் எந்திரி ஆர்.வேல் கஜன் அவர்களையும் காரியாலய அதிகாரிகளையும் வரவேற்று கௌரவித்த இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

மேலும் இந்நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதிப்பிரதம செயலாளர் (நிர்வாகம்) எம்.எம். மன்சூர் மற்றும் கிழக்குமாகாண பிரதிப்பிரதம செயலாளர் (நிதி) ஏ.எம்.எம். றபீக் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர். இதன்போது சம்மாந்துறை நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலய பிரிவுக்குட்பட்ட 14





விவசாய அமைப்புக்கள் மற்றும் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கலந்துரையாடிய விவசாயிகள் அவற்றுக்கான தீர்வை பெற்றுத் தரவேண்டிய விடயங்களையும் எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்வில் சம்மாந்துறை நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலய உத்தியோகத்தத்தார்கள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலரும்

காலைக்கதிர் Kalaikkathir

# பரீட்சை திணைக்கள உயர் பதவிகளில் இன சமத்துவம் பேணப்படல்வேண்டும்

## கிழக்கு கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

(அஸ்லம் எஸ்.மௌலானா)

இலங்கை பரீட்சை திணைக்களத்தில் கடமையாற்ற வேண்டிய இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரிகளின் பதவி நியமனங்களில் இன சமத்துவம் பேணப்பட வேண்டும் என்று இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கத்தின் செயலாளர் ஏ.எல்.எம். முக்தார் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்;

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தில்

உள்ள நிறைவேற்றுத்தர பதவிகளான பரீட்சை ஆணையாளர் நாயகம், மேலதிக பரீட்சை ஆணையாளர்நாயகம், பிரதிப்பரீட்சைஆணையாளர், உதவி ஆணையாளர் ஆகிய பதவிகளில் இலங்கை கல்வி நிருவாக சேவையில் உள்ள முஸ்லிம் அதிகாரிகள் எவரும் நியமிக்கப்படாத குறை நீண்ட காலமாக நிலவி வருகிறது.

பரீட்சைத் திணைக்களத்தின் தற்போதைய கட்டமைப்பில் தமிழ் மற்றும் சிங்கள அதிகாரிகள் மாத்திரமே மேற்படி பதவிகளில் கடமையாற்றி வருகின்றனர்.

கடந்த காலங்களில் மேலதிக பரீட்சை ஆணையாளர்நாயகம், பிரதிப்பரீட்சைஆணையாளர் மற்றும் உதவி ஆணையாளர் ஆகிய பதவிகளில் முஸ்லிம் அதிகாரிகள் கடமையாற்றி வந்துள்ளனர்.

இறுதியாக ஏ.எஸ்.முகமட் என்ற இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரி, பிரதிப் பரீட்சை ஆணையாளராக கடமையாற்றி 2018 ஆம் ஆண்டு ஓய்வுபெற்ற பின்னர் எந்த ஒரு முஸ்லிம் அதிகாரியும் நியமனம் செய்யப்படவில்லை.

2007 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் இலங்கை கல்வி நிருவாக சேவைக்கு நியமனம் செய்யப்பட்ட முஸ்லிம் அதிகாரிகள் ஒருவராவது பரீட்சை திணைக்களத்திற்கு நியமனம் செய்யப்படவில்லை.

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் பின்னர் முஸ்லிம் அதிகாரிகள் நியமனம் செய்யப்பட தடை செய்யப்பட்டதொரு அரச நிறுவனமாக இலங்கை பரீட்சைத் திணைக்களம் மாறி உள்ளதா எனும் சந்தேகம் முஸ்லிம் கல்வியியலாளர்களால் நோக்கப்படுகிறது.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தில் நிறைவேற்றுத் தரத்தில் முஸ்லிம் அதிகாரிகள் எவரும் இல்லாமை காரணமாகவே முஸ்லிம் பெண் பரீட்சார்த்திகளால் தமது தலையை மறைத்து அணியப்பட்டுள்ள பர்தாவின் காதுப் பக்கத்தை நீக்கிய பின்னர்

பரீட்சைக்குதோற்றவேண்டுமென்றஒருமுஸ்லிம் கலாசாரத்துக்கு முரணானதொரு தீர்மானத்தை எடுப்பதற்கு காரணமாக

அமைந்தது.

பரீட்சைத்திணைக்களத்தில்முஸ்லிம்அதிகாரிகள் இல்லாதிருப்பது குறித்து முஸ்லிம் அரசியல்வாதிகள் கவனம்

செலுத்துவதாகவோ நாடாளுமன்றத்தில்

கல்வியமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவோ இல்லை.

இந்நிலையில், பரீட்சை திணைக்களத்தில் இலங்கை கல்வி நிருவாக சேவையைச் சேர்ந்த முஸ்லிம்அதிகாரிகள்நியமனம்செய்யப்படவேண்டும் என்று தமது சங்கம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தை வலியுறுத்தியுள்ளதாக ஏ.எல்.எம். முக்தார் மேலும் தெரிவித்தார். (05)

# வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கைக்கான பயிர் விதைகள் வழங்கப்படவுள்ளன



(எம்.எப்.றிபாஸ்)

வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தட்டுமுனை கிராமத்தில் வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கைக்காக பயிர் விதைகள் வழங்கப்படவுள்ளன.

பிதேச செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் மற்றும் கிராமமட்டத்திலான குழுக்களால் அடையாளம் கண்ட பயனாளிகளுக்கு விழுது தன்னார்வ தொண்டர்களால் மட்டக்களப்பு பிரதி விவசாயப் பணிப்பாளர் மற்றும் விவசாய போதனாசிரியர் பிரபா ஆகியோரின் நெறியாழ்கையில் இரண்டு கட்டங்களாக வழங்கப்படவுள்ளன.

சுமார் 25 பயனாளிகளுக்கு பயிர்ச் செய்கை சம்பந்தமான பயிற்சிகள் வழங்கப்பட்டு இறுதியாக பயிர்விதைகளும் அதற்கான ஏனைய பொருள்களும் வழங்கப்படவுள்ளதுடன் இச்செயற்திட்டம் சம்பந்தமாக வாகரை விவசாய கேந்திர நிலையத்துடன் இணைந்து கண்காணிக்கப்படவுமுள்ளது. (05)

# புனித பத்திசிரியார் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கூட்டம்

(பி.கேதீஸ்)

தலவாக்கலை புனித பத்திசிரியார் கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஒன்று கூடல் எதிர்வரும் ஜூலை 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் கல்லூரியின் அதிபர் அருட்தந்தை டொமினிக் சந்தனம் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பத்திரிசியர் கல்லூரியில் (1937- 2021) ஆம் ஆண்டு வரை கல்வி பயின்ற அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கல்லூரியின் நிர்வாகம் அழைப்புவிடுத்துள் ளது. (05)

# மருதமுனை விக்டோரியஸ் வி.கழகத்தின் கலர்ஸ் நைட்டும் மேலங்கி அறிமுகமும்



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை விக்டோரியஸ் விளையாட்டுகழகத்தின் புதிய மேலங்கி அறிமுக நிகழ்வும் விக்டோரியஸ் கலர்ஸ் நைட் விழாவும் கழகத்தின் ஏற்பாட்டில் மருதமுனை ஒசாக்கா ரேஸ்ட் இன் வரவேற்பு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்றது.

விக்டோரியஸ் விளையாட்டு கழகத்தின் தலைவர் ஏ.எம்.முபீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு ஐ.எல்.முஹம்மது தாஹிர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். ஷ

விசேட அதிதியாக கிழக்கின் கேடயம் அமைப்பின் பணிப்பாளரும் முன்னாள் அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளத்தின் தலைவரும், அக்கரைப்பற்று மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான எஸ்.எம். சபீஸ் கலந்து கொண்டு இளைஞர்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார். இவர் தனது உரையில், தற்போதைய இளைஞர்கள் சிறந்த தலைமைத்துவத்தை நோக்கி நகர வேண்டியதன் அவசியம், தொழில்நுட்ப





மற்றும் தொழில்சார் அறிவை விருத்திசெய்ய வேண்டியதன் தேவை பற்றி இளைஞர்களுக்கு விளக்கமளித்து உரையாற்றினார்.

இதில் கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸின் பிரத்தியோக மக்கள் தொடர்பாடல் இணைப்பாளருமான ஏ.ஆர்.அமீர், கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.எஸ்.எம். நவாஸ் (ஹாரீஸ்), மருதமுனை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் யூ.எஸ்.சமீம், கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் செயலாளர் எம்.ஐ. நஜ்முல் றியாஸ், அதன் பொருளாளர் எம்.எம்.சறூக், மஸ்ஜிதுல்கவுஸர்பள்ளிவாசல்தலைவர் அல்ஹாஜ் எம்.எம். நிசார் ஜே.பி, தொழிலதிபர் எம்.என் சுஹைப் ரூமி உட்பட விக்டோரியா விளையாட்டுக் கழகத்தின் முகாமையாளர் எம்.என்.எம். ஹிஸாம், செயலாளர் எம்.ஏ.எம்.றஜாத், பொருளாளர் ஏ.பி ஆசீர், உப தலைவர் எம்.எம்.தாஹிர், ஆலோசகர் எம்.ரி.வாக்கிர் அஜ்மல், உப செயலாளர் எம்.சி.அகீர்ஜ் உட்பட கழக வீரர்கள், அனுசரணையாளர்கள், பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் போது விக்டோரியா விளையாட்டுக் கழகத்தினருக்கு புதிய மேலங்கி வழங்கி வைத்த நிகழ்வின் பிரதம அதிதி ஐ.எல் முஹம்மட் தாஹிர் மற்றும் அவருடைய புதல்வர் எம்.ரி.வாக்கிர் அஜ்மல் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள். விசேட அதிதியாகக் கலந்துகொண்ட எஸ்.எம். சபீஸ் நினைவுச்சின்னம் வழங்கி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

நிகழ்வுகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அறிவிப்பாளரும் ஊடகவியலாளருமான ஏ.எல்.எம். ஷினாஸ் தொகுத்து வழங்கியமை குறிப்பிடத்தக்கது.(05)

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சர் நேற்று வருகை





சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன உள்ளிட்ட சுகாதார அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய குழு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நேற்று (புதன்கிழமை) விஜயம் செய்தனர்.

இதன்போது, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் என்பு மச்சை மாற்று சத்திர சிகிச்சை நிலையம் சுகாதார அமைச்சரால்சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

வைத்தியசாலை விடுதிகள், சத்திரசிகிச்சை பிரிவுகளையும் போதனா வைத்தியசாலையின் அரும்பொருட் காட்சியகத்தையும் அமைச்சர் குழுவினர் பார்வையிட்டனர்.

அத்தோடு, குருதி மாற்று சிகிச்சைக்கான உபகரணம் ஒன்றையும்யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலைக்கு வழங்கி வைத்ததுடன் ஞாபகார்த்தமாக மரக்கன்றையும் நாட்டி வைத்தார்.

அமைச்சரின் இந்த விஜயத்தின் போது சுகாதார அமைச்சின் செயலாளர் மஹிபால மற்றும் சுகாதார பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன, நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், தர்மலிங்கம் சித்தார்தன், யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்திய மூர்த்தி வைத்தியசாலையின்அதிகாரிகள்,பணியாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.



சுகாதார அமைச்சர் ரமேஷ்பத்திரனஉள்ளிட்ட சுகாதார அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய குழுயாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து பல்வேறுபட்ட நிகழ்வுகளில் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# சுகாதார அமைச்சர் பங்கேற்ற யாழ். கூட்டத்தில் ஒருவர் கைது



யாழ்ப்பாணத்தில் சுகாதார அமைச்சர் பங்கேற்ற கலந்துரையாடலில் குழப்பம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வடக்கு மாகாணத்தின் சுகாதார மேம்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண சபை கேட்போர் கூடத்தில் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண, நாடாளுமன்ற உறுப்பினர்கள்,வடக்கு மாகாண ஆளுநர், சுகாதார துறை உயரதிகாரிகள், வைத்தியர்கள் பங்கேற்புடன் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றது.

இதன்போது கூட்டத்தில் அநாமதேயமாக பங்கேற்ற ஒருவர் கலந்துரையாடலை முகநூல் வழியாக நேரலையில் ஒளிபரப்பியிருந்தார்.

இதனையடுத்துமுகநூல்நேரலைசெய்யவேண்டாம் எனவும் அவரை அங்கிருந்து வெளியேறுமாறும் அதிகாரிகள் தெரிவிக்கவே அதனை மறுத்து தொடர்ந்து அமர்ந்திருந்தார்.

இதன்போது கூட்டநிறைவில் அங்கு சுகாதார அமைச்சருடன் பேச முற்பட்ட நிலையில் அமைச்சர் அங்கிருந்து செல்லவே, கூட்டத்தில் நின்ற அதிகாரிகளுடன் குழப்பத்தில் ஈடுபட்டார்.

இதனை தொடர்ந்து சத்தமிட்டவாறே ஆளுநர் மற்றும் அதிகாரிகள் கலந்துரையாடிய பிரதம செயலக அலுவலகத்தில் சென்று முரண்பாட்டில் ஈடுபட்டார். அதிகாரிகள்வெளியேறச்சொல்லியும் தொடர்ந்து முரண்பாட்டை ஏற்படுத்தவே பொலிஸாருக்கு தகவலளிக்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த சாவகச்சேரி பொலிஸார் குழப்பத்தில் ஈடுபட்ட நபரை கைது செய்தனர்.

சந்தேக நபரை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்துள்ள பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர் உள்ளிட்ட உயரதிகாரிகள் பங்கேற்ற கலந்துரையாடலில் அநாமதேயமாக குறித்த நபர் நுழைந்தமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் சாவகச்சேரி வைத்தியசாலை முன்னாள்பதில்வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனாவும் அழையா விருந்தாளியாக பங்கேற்றுமுகநூல்நேரலைசெய்தமையும்சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (05)

# 4 வயது சிறுமியின் சடலம் கிணற்றில் இருந்து மீட்பு

ருவன்வெல்ல பொலிஸ் பிரிவிற்குற்பட்டபகுதியில்கிரிபோருவ பிரதேசத்தில்உள்ளகிணற்றிலிருந்து 4 வயது சிறுமியின் சடலம் ஒன்று ருவன்வெல்ல பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்று (புதன்கிழமை) காலை இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, சிறுமிமீட்கப்பட்ட கிணற்றுக்கு அருகில் சிறுமியின் தாயார் பேச முடியாத நிலையில், மயங்கி கிடந்ததை அப்பகுதி மக்கள் அவதானித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ருவன்வெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# ஜனாதிபதி செயற்திட்ட நிகழ்வு பதாகையில் தமிழ் எழுத்து பிழை




நுவரெலியா சினிசிட்டா நகர மண்டபத்தில்ஜனாதிபதிநிதியத்தால் புலமைப்பரிசில் வழங்கி வைக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது காட்சிப்படுத்தப்பட்டிருந்தபதாகையில்'ஜனாதிபதி' என்பதற்கு பதிலாக 'ஐனாதிபதி' என குறிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக அங்கிருந்த ஓர் அரச அதிகாரியிடம் தெரிவித்த பொழுது அவர் சிங்களத்தில் சரியாக இருக்கின்றது தானே என்று பொறுப்பற்ற முறையில் பதில் கூறினார்.

நாட்டின்தலைவராகஇருக்கின்ற ஜனாதிபதியின் நிகழ்வுகளில் இப்படி நடைபெறுவதாக இருந்தால் 'இனி எங்கு போய் முறையிடுவது என்பது நிகழ்வில் கலந்து கொண்ட பாடசாலை அதிபர் ஆசிரியர்களின் கேள்வியாக இருந்தது. இது அதிகாரிகளின் அசமந்த போக்கா? அல்லது திட்டமிட்ட செயற்பாடா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது. மத்திய மாகாண ஆளுநர் கலந்து கொண்டிருந்த இந்நிகழ்வில் தமிழ் அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டிருந்தனர் என்பது முக்கிய விடயம்.(05)

# தாய்லாந்திலுள்ள 'முத்துராஜா' உடல்நிலையில் முன்னேற்றம்



இலங்கையில் இருந்து தாய்லாந்துக்குதிருப்பிஅனுப்பப்பட்ட முத்துராஜாயானையின்உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தாய்லாந்துதூதுவர்தெரிவித்துள்ளார்.

2001 ஆம் ஆண்டு முத்துராஜா யானை இலங்கைக்கு தாய்லாந்து நாட்டினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

முத்துராஜா யானை அளுத்கம கந்த விகாரைக்கு புண்ணிய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டது.

இந்நிலையில், கடந்த ஆண்டு அங்கு அந்த யானை உடலியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளதாக ரெர் என்ற விலங்கின நலன்பேண் பாதுகாப்பு அமைப்பு அரசாங்கத்திடம் முறைப்பாடளித்தது.

முத்துராஜா யானை தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காத காரணத்தால் ரெர் அமைப்பு இவ்விடயம் தொடர்பில் கொழும்பில் உள்ள தாய்லாந்து தூதரகத்தில் முறைப்பாடளித்தது.

அதனை தொடர்ந்து இந்த யானை மீண்டும் தாய்லாந்துக்கு 2023 ஆம் ஆண்டு ஜூலை 02 ஆம் திகதி கொண்டுசெல்லப்பட்டது.

யானை தாய்லாந்துக்கு அனுப்பப்பட்டு ஒரு வருடமாகிய நிலையில், அங்கு சிகிச்சை பெற்று வருகிறது.

இது தொடர்பில் தாய்லாந்து தூதர் போஜ் ஹர்ன்போல் தெரிவித்துள்ளதாவது,

யானையின் பின்பகுதியின் இருபுறமும் வீங்கி சீழ் வடிகிறது. யானை நடையின்றி இருப்பதால் வளைக்கப்படாத மற்றும் கடினமான இடது முன்காலுக்கு சரியான சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் யானை ஊனமாகிவிடும்.

இந்நிலையில், காயம் மற்றும் சீழ்வடிதல் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டுவரும் வழக்கமான சிகிச்சைகளினால் இடுப்பின் இருபுறங்களிலும் உள்ள வீக்கம் முழுமையாகக் குணமடைந்துள்ளன, ஆனால் மிகவும் நுட்பமான சிகிச்சையாக நடையை சரிசெய்வது உள்ளது என தெரிவித்துள்ளார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.07.2024இல் வெளியிடப்பெற்றது